# Egalitaria

An Egalitarians' Initiative

Volume 1, Issue 5
May 2021
Every Month Second Sunday

INSIDE THIS ISSUE:

| | |
|---|---|
| Events | 2 |
| Financial Position | 3 |
| Egalitarians Welcomes | 3 |
| Let's Discuss the 'C' Word | 4 |
| 'D'Tales | 5 |
| Special Articles | 6 |
| Ambedkar's Historical Approach | 10 |

# The Alternative Stories

We feel privileged to dedicate this issue of Egalitaria to the memory and works of Pandit. Iyothee Thaas, a nineteenth century reformer, siddha medicine practitioner, whose alternative stories of Dalit religion and culture have created widespread attention and debate not just during his time even now.

Apart from usual events, curated news articles and special articles, this issue also carries the verbatim speech transcript of Writer Jeyamohan's lecture titled 'Ambedkar's Historical Approach', delivered in a virtual event held on 11th April 2021 to commemorate Dr Ambedkar's 130th birth anniversary. Please do read and let us know what you feel.



© EG Naveen Kumar

**Iyothee Thass**

**20 May 1845- 5 May 1914**

*to*

*Iyothee Thass*

''வானம் பொய்ப்பதற்குக் காரணம் ஒழுக்கமுள்ள ஞானிகள் இல்லாமையே. ஞானிகள் இல்லாமைக்குக் காரணம் நீதியும் நெறியும் வாய்மையும் நிறைந்த அறிவாளிகள் இல்லாமையே. அறிவாளிகள் இல்லாமைக்குக் காரணம் ஆட்சித் திறனும் அன்பும் உடைய அரசர்கள் இல்லாமையே. அத்தகைய அரசர்கள் இல்லாமைக்குக் காரணம் கல்வி, அறிவு, அருள், ஒழுக்கம், ஒற்றுமை ஆகியன உடைய குடிகள் இல்லாமையே. கல்வி, வேளாண்மை, காவல்துறை போன்ற அனைத்துத் துறைகளிலும் மக்கள் அனைவருக்கும் சமவாய்ப்பு வழங்க வேண்டும்; ஊராட்சி, நகராட்சி, சட்டமன்றம், நாடாளுமன்றம் போனறவற்றிலும் எல்லா வகுப்பினருக்கும் உரிய பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்''.

\- அயோத்தி தாசர்

# Events in April

- An RTI has been filed on 8th April to seek the diversity of faculty members in the University of Madras.
- Writer Thiru. Balasubramaniyam Muthusamy has wished Egalitarians for our work, through a mail on 8th April.
- Tamil Nadu state information commission has directed The PIO – TNAU to furnish the details of caste category wise Faculties in TNAU for our RTI dated 16.07.2020. The PIO has furnished the Information on 21st April.
- Egalitarians is happy to share that we have conducted the first Dr Ambedkar Memorial Lecture, a virtual event, successfully on 11th April. The event started with the Welcome Address by EG Revathi. Our Guest, Writer Thiru. Jeyamohan delivered a lecture on Ambedkar’s Historical Approach followed by a Q & A session, which was facilitated by EG Mathivathana, in which Writer Jeyamohan answered questions and clarified doubts of the participants. The event ended with the Vote of Thanks by EG Subash.
- All the executive Committees of Egalitarians has been reorganized on April 16th.
- On April 19th an RTI has been filed to Tamil Nadu Prison Department seeking details regarding various categories of Prisoners.
- An RTI has been filed seeking the social and gender diversity of the Doctoral Programme and faculty gender and caste diversity in the IIT Kanpur, IIT Kharagpur, and IIT Delhi.
- Information regarding Caste/Gender-category wise no. of candidates applied, selected for UPSC CSE in last 3 years has been asked via an RTI application dated 20.04.2021.
- A fresh RTI application has been filed with UPSC on 23.04.2021 seeking Caste category wise number of Candidates alloted IAS, IPS, IFS in Home Cadre including candidates of reserved category.
- National Comission for Safai karamcharis has sent an incomplete response to our query.
- On 28th April an RTI has been filed to Madras University for Caste Category wise Faculty Diversity.
- An RTI Appeal has been filed to The Registrar,University of Madras on April 28th, to direct the PIO to furnish the information asked on our RTI dated 27.01.2021
- To our RTI dated 29.12.2020 to the Police department, we didn’t get the proper information, accordingly an Appeal has been filed to the TN Information commission on 28th April.
- On April 28th we have decided to adopt “egalitarians.net” as our website domain name.
- Our Regular Monthly meeting was held on 25th April through Zoom. Elaborate discussion was made as per the agenda which includes discussion About Egalitarians & New Members Induction, RTI Orientation, Work Progress Session, New Member Suggestions and feedback.




Monthly review meet, 25th April 2021

# Financial Position

Donations (between 1st and 30th April 2021) : Rs. 27,500/-

Donors : Rs. 25000 donated by Balasubramanian Muthusamy and Rs. 2500 by Members

Expenditure (between 1st and 30th April 2021) : Rs . 6,700/-

Balance (as on 30th April 2021) : Rs . 46,800/-

**Bank Account Details**

Bank : Axis Bank

Account number : 913010045380268

Account type : Savings Account

IFSC : UTIB0001449

Account holder : Manoj K G

# Egalitarians Welcomes

Sixteen new members have joined us last month. We are growing and this makes our total strength thirty-nine. However, member diversity is still a concern for us.

- **EG VIGNESH**
- **EG CHANDRA MOULI**
- **EG MATHAN KUMAR**
- **EG RAGURAMAN**
- **EG MATHIVATHANA**
- **EG PRIYANKA**
- **EG GOKILEESWARI**
- **EG SUCHITRA**
- **EG SURIYA PRABHA**
- **EG NAVEEN KUMAR**
- **EG KRISHNA KUMAR**
- **EG RAJA**
- **EG JANAKI RAMAN**
- **EG DHINESH KUMAR**
- **EG GOWTHAM**
- **EG VIGNESH**

# Let's Discuss the 'C' Word

- Lecturer Srilata Sircar and Researcher Vignesh Rajahmani of Kings College, London in their article (Published in The Conversation, 6th April, 2021) argues about discrimination in civil services recruitment. The article specifies that the quota system only provides for entry- level representation and in practice, 'lower- caste' groups achieve close to zero representation in senior civil service roles, for instance, as of March 2011, there were no SC secretaries and only four ST secretaries out of 149 in the whole civil service. In 2019, the number remained dismal with one SC, three STs and zero OBCs in the 89 secretary- level posts.

- Kailash Jeenger, faculty of University of Delhi, shares Rahul Sankrityayan's work in his article. The journey of Rahul Sankrityayan offers us to see a critique of the caste system coming from a person of an 'upper' caste. The article also triggers us to think a question, Dalit's agency- Is it only Dalits who can voice their concerns, or can the 'upper' caste people also join in?

- Sruti MD, in her article (Published in News Click, 4th April, 2021) specifies the implementation of the Forest Rights Act, 2006 in Tamil Nadu. The reports shows that many tribal villages in Tamil Nadu have not formed gram sabhas in implementing the FRA. The article also states that, Tamil Nadu, as the worst performer in the country regarding the implementation of FRA.

- Whether trust in institutions such as state government, judiciary and police vary by caste? Explained by the Sociologist Veena S. Kulkarni and Raghav Gaiha in their findings (Published in The Hindu) based on Indian Human Development Survey (IHDS), 2015. Their results show that the most trusted institution amongst the deprived were the judiciary, followed by state governments and at last police.

- An independent illustrator, Siddesh Gautam described about a true Ambedkarite, Kausalya Baisantri in an article (Published in The Print, 15th April, 2021). Kausalya Baisantri was an early Dalit woman Autobiographer and worked tirelessly for gender equality and paid special attention to the issues of Dalit women. She followed the principle of 'Educate, Agitate and Organize' and made a huge contribution to the Indian feminist movement and Dalit movement. As stated by Siddesh Gautam, Her life proves that just reading Ambedkar is not enough; one has to practice Ambedkar to become a true Ambekarite.

- Journalists Radhika Bordia, Yogesh Pawar, Ayesha Minhaz and Salik Ahmad sheds light on manual scavenging with emphasis on Dalit sanitation workers in their five article series (part 1, part 2, part 3, part 4 & part 5, Published in Scroll.in , April 2021). These articles clearly explore issues such as pushing deaths due to manual scavenging under the carpet, difficulties in implementation of Prohibition of Employment of Manual Scavengers and Their Rehabilitation Act, 2013 etc.

- Chinnaiyah Jangam, in his article (Published in The Print, 15th April, 2021) talks briefly about life history of India's first Dalit hotelier, M. Nagloo. He argues that Nagloo's biography, written by his son, M. N. Venkataswamy, is perhaps the first Dalit biography written in English which also challenges conventional historical understanding in Dalit studies.

# 'D' Tales

We present here the graphics of caste diversity in doctoral degree admissions at the Tamil Nadu Agricultural University for the academic year 2020- 21.






**_De jure_ vs _De facto_ in 2020-21 Admissions**

| Category | Norm | Actual |
|---|---|---|
| ST | 1 | 1.2 |
| SCA | 3 | 3 |
| SC | 15 | 15 |
| MBC/DNC | 20 | 19.8 |
| **BCM** | **3.5** | **3** |
| BC | 26.5 | 27 |

**Number of Departments/Areas with No Dalit/Adivasi Students in 2020-21**

| | |
|---|---|
| Number of Departments with Zero SC Students | 13<br>(48.14) |
| Number of Departments with Zero SCA Students | 22<br>(81.48) |
| Number of Departments with Zero ST Students | 25<br>(92.59) |
| Total Number of Departments | 27 |

Figures in parenthesis are percentage to the total

# Special Articles

**இன்று நான் EGALITARIANS உடன்....**

***EG பட்லூ***

*சாதி என்பதன் அர்த்தம் அறியும் முன்னமே அதன் ஆதிக்கத்தை அறியப்பெற்றேன் என் பள்ளி பத்தாம் பருவதிலேயே. நான் பிறந்த கிராமம் ஓர் அழகிய மலை கிராமம். இதமான குளிரும் மிதமான வெயிலும். அடர்ந்த வனங்களும். அழகிய மனங்களும் கொண்ட அமைதியான ஊர். அன்றைய காலத்தில் எங்கள் கிராமத்தில் விவசாய நிலங்களின் மதிப்பு எங்கள் மலைக்கு கீழ் உள்ள நகரங்களை விட மிகக் குறைவு. பணமும் வசதி படைத்த பெரியோர்களும் அவர்களின் சொந்த ஊர்களில் உள்ள சொத்துக்களை விற்று. எங்கள் கிராமத்தில் ரெட்டை லாபத்தில் நிலங்களை வாங்கினார்கள். அன்று நில உரிமையாளர்களாய் இருந்த எங்கள் மக்களில் பலர் இன்று அதே நிலத்தில் விவசாய கூலிகள். அன்று வரை எங்களுக்குள் சாதிய பார்வை என்று ஒன்று இருந்ததாக நினைவில்லை என என் அம்மா கூற நான் கேட்டதுண்டு... அவள் கூறும் போதெல்லாம் புரிந்தது போல் தலையை ஆட்டி விட்டு எழுந்து வந்திருக்கிறேன்...நான் பள்ளி முதல் வகுப்பில் இருந்தே வகுப்பில் முதல் மாணவி.(பெருமைக்காக அல்ல) அப்படி இருந்தும் ஒவ்வொரு முறையும் நான்*

பெரிதாய் எல்லோராலும் பாராட்டப்பட்டதில்லை. அதை பெரியதாய் மனதில் இருத்தி கொண்டதில்லை. ஒன்பதாம் வகுப்பில் தான் முதன் முதலாய் நான் இரண்டாம் இடத்திற்கு தள்ளப்பட்டேன். காரணம் என் ஆசிரியர். நான் (குறிப்பாக இந்த சாதியை சேர்ந்த மாணவி) முதல் இடம் எடுக்க கூடாது என்று என்னை அவர் வகுப்பில் இருந்து எதாவது காரணங்கள் கூறி புறக்கணிக்க செய்வார். சந்தேகங்கள் கேட்க சென்றால் தள்ளி நிற்க சொல்வார். இத கிளாஸ் ல சொல்லும் போது என்ன தூங்கிட்டு இருந்தியா என அனைவர் முன்னிலும் அலட்சியம் காட்டுவார். என்னால் அன்றும் அவர் என் மேல் மட்டும் காட்டிய கடின முகத்திற்கு காரணம் விளங்கவில்லை. அதை பொருட்படுத்தாமல் படித்து பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் பள்ளிக்கு முதல் மாணவி ஆனேன். எதையோ சாதித்தது போல் இருந்தது அன்று அவரை பார்த்த போது. உண்மையாகவே சாதனை தான் என நினைத்து ஓர் பெரிய பள்ளி எனக்கு இலவச கல்வி கொடுக்க முன்வந்தது. பெயர் பெற்ற பெரிய பள்ளியில் இலவசமாக இடம் கிடைக்க பெருமையோடு என் உற்றார் உறவினரின் ஆசியோடு படியெடுத்து வைத்தேன். கனவிலும் அப்படி ஒரு பள்ளியில் படிப்பேன் என்று நினைத்ததில்லை. என் அருகே அமர்ந்த தோழியிடம் எதார்தமாய் ஒரு நாள் பள்ளி கட்டணம் கேட்டு அதிர்ந்து போனேன். முதலில் இலவசமாக சேர்க்கப்பட்ட என் மதிப்பெண்ணை பற்றி பேசினார்கள். நாட்கள் நகர நகர என் மதிபெண்ணின் மதிப்பு மங்கி என் ஊர் பெயரால் நான் அடையாளம் காணப்பட்டேன். அந்த இலவச இடமும் என் சாதிக்கான ஆறுதலாய் மாறி போனது அவர்கள் கண்களுக்கு. அன்று வெறும் புத்தக புழுவாகவே இருந்து விட்டேன். என்னை தாக்கிய அம்புகளின் ஆதியை ஆராய முட்படவே இல்லை. இந்த சூழ்நிலைகள் என்னை பெரிதும் பாதிக்க வில்லை. அதன் அர்த்தம் அப்போது அறியாததால். அதை தொடர்ந்து என் கல்லூரி வாசலில் வலசை பறவையாய் வரவேற்கப்பட்டேன். முதலாம் ஆண்டு. முதல் நாள். விடுதியில் பெற்றோர் என்னை விட்டு சென்றப்பின். என் அறைக்கு நான் தான் அன்று முதல் ஆள்... ஆவலோடும் சற்றுப் பதற்றத்தோடு அறை வாசலில் நின்றிருந்தேன். என் அறைக்கு அடுத்து வந்த என் தோழியும் எங்கள் மாவட்டமே... கேட்டதும் ஒரு ஆனந்தம். ஒரு வித நம்பிக்கை. அவளின் பெற்றோர் என் ஊரை பற்றி விசாரிக்க. நானும் மிகவும் உற்சாகமாய் கூற உடனே அவரின் அடுத்த கேள்வி எவ்ளோ மார்க். (அந்த பொண்ணு அந்த ஊருல்ல...ஓ... அதான் சீட் கெடசிருக்கு... சரி சரி... )என்று ஏலன பார்வை பார்த்ததும் கொஞ்சம் வலிக்கத்தான் செய்தது. தனியாய் என் அறை தோழியிடம் என்னுடன் சற்று அளவாக பழகும்படி அறிவுரை கூறி சென்றனர். அன்றிரவு அம்மாவிடம் அலை பேசியில் காரணம் கூறாமல் அழுதேன். ஆனால் நான் கல்லூரியில் பெற்ற முதல் மற்றும் கடைசி காயம் அதுவே. அதன் பின் நாட்களில் என் தோழி தோழர்களின் கை கோர்ப்பில் சமத்துவ பாதையில் பயணித்த என் வாழ்வின் பொற்காலமும் அதுவே. அந்த கனா காலம் அதி வேகமாய் கரைந்து போக....அடுத்து என்ன என்ற கேள்வியும் அதற்கு விடையுமாக சென்னையை நோக்கி தொடங்கியது என் பயணம் அரசு தேர்வுகளை எதிர்கொள்ள வேண்டிய பயிற்சிக்காக. புது ஊர். புது மனிதர்கள். பல முகங்கள். பல அனுபவங்கள் என நான் அங்கு எதிர்கொண்ட ஒரு நிகழ்வு என் வாழ்வில் நான் இன்றும் வருந்தும் தவறு ஒன்றை இழைக்க வழியாய் போனது. நான் முதலில் விடுதியில் தங்கி வகுப்புகளுக்கு சென்று கொண்டிருந்தேன். சரியான சூழலும் சத்தான உணவும் இல்லாததால் உடல் நலக்குறைவு ஏற்பட வீட்டிற்க்கு திரும்ப வேண்டிய கட்டாயம். வீட்டில் பயிற்சியை தொடர போதிய வழி நடத்தலும் வசதியும் இல்லாததால் மீண்டும் சென்னை பயணப் பட்டேன். இந்த முறை ஒரு வீட்டில் வாடகை கொடுத்து தங்குவதாக ஏற்பாடு. டெலிகிராம் மூலம் ஒருவர் தாம் தங்கி உள்ள இடத்தில் மேலும் ஒருவருக்கு (ஒரு அறைக்கு இருவர் வீதம் மொத்தம் நான்கு பேருக்கான அறை) இடம் உள்ளதாக விளம்பரப்படுத்த அவர்களும் என்னை போலவே அரசு தேர்வுகளுக்கு தயார் செய்பவர்கள் என்ற ஒரு ஒற்றுமையை தவிர வேற எந்த விவரமும் அறியாமல் அவர்களோடு இணைந்தேன். நம்பிக்கையோடு சென்று சேர்ந்தேன். வகுப்புகளை தொடர்ந்தேன். நாட்கள் நகர நகர நான் தங்கி இருந்த வீட்டில் சில மாற்றங்களை உணர்ந்தேன். என்னுடன் இருந்தவர்கள் என்னை மட்டும் புறக்கணிப்பது போல. இந்த உணர்வு தீவிரமானது (அக்கா என்ன ஆச்சு கா... ஏன் என்கிட்ட மொதல் மாறி பேச மாடிங்குறிங்க என எதார்தமாய் கேட்டேன்...).

*அன்று தான் நான் முதல் முதலாய் நேரடியாக சாதியின் பெயரால் தாக்கப்பட்டேன். அதன் பின் வரும் நாட்களில் தொடர் வன் சொற்களால் கையாளப் பட்டேன். கடுன்செயல்களையும் வன் சொற்களையும் ஏற்று கொள்ள முடியவில்ல. எதிர்த்து பேச துணிவும் இல்லை. சுய மரியாதை இழந்ததை எண்ணி எண்ணி சுயத்தையும் இழந்தேன். பெற்றோர். என் குறிக்கோள் என எல்லாம் மறந்து போனது. யாரிடமும் சொல்ல முடியாமல்... தற்கொலை முயற்சிக்கு தூண்டபப்பட்டேன்.. தீவிர சிகிச்சைக்குப்பின் கண் விழித்தேன். என் கோழைத்தனத்தை எண்ணி எண்ணி இன்று வரை நான் வெட்காத நாளில்லை.*

*நான் மறக்க நினைத்த நிகழ்வை இன்று மீண்டும் உங்கள் கண் முன் காட்ட காரணம், ஒருவரை சாதிய கண் கொண்டு  பார்க்கும் வழக்கம் கிராமத்தையும் வளர்ச்சி பெறாத சமூக நிலைகளில் மட்டுமே இருக்கும் என்றே நான் எண்ணி இருந்தேன். ஒரு படித்த பகுத்தறிவு பெற்ற அரசு சேவை பணிகளுக்கு தயார் செய்ய கூடிய இளம் பெண்களால் நான் இச்செயலுக்கு உள்ளாக்க பட்டதை எண்ணி மிகவும் வருந்துகிறேன். என்னை போல் எத்தனையோ உயிர்கள் இந்த நொடியும் ஏதோ ஒரு இடத்தில் தன் நிலையை வெளியில் சொல்ல முடியாமல் உழன்று கொண்டு இருக்கலாம். அவர்கள் எந்நாளும் என்னை போல ஒரு கோளை தனமான முடிவை நோக்கி செல்ல கூடாது என்பதற்காகவே இன்று நான் EGALITARIANS உடன்.*

---

**Book Review**

***EG Anand***

**Merit as a Proxy for Ascription**

Every established order tends to produce the naturalization of its own arbitrariness.

- Pierre Bourdieu, “Outline of a Theory of Practice”

[For upper castes,] caste-qua-caste has already yielded all that it can and represents a ladder that can now be safely kicked away. Having encashed its traditional caste-capital and converted it into modern forms of capital like property, higher educational credentials and strongholds in lucrative professions, this section believes itself to be ‘casteless’ today.

- Satish Deshpande, “Caste and Castelessness”

The examination of ‘others’, it is widely said, leads us to the examination of ourselves. What is not said often is that the opposite is also equally true. Anthropology from being a study of ‘otherness’ has, now, become a study of ‘oneself’. Ironically, ‘otherness’ was (and to some extend is) associated only with being unprivileged. There was a time when anthropology was fungible with the study of the tribes, the marginalized and the deprived. This is understandable since anthropology as a discipline emerged out of the colonial expansion project of the Europe. However, this is a moment of self-reckoning for Anthropology that the discipline, of late, is taking a closer scrutiny of itself and making noteworthy course corrections. The recent deluge of anthropological literature on white privilege and supremacy is a testimony to this commitment. There are two such important anthropological contributions to the anthropology of caste and caste-privilege in the Indian context: 1. *Tamil Brahmans: The Making of a Middle-Class Caste* (University of Chicago Press, 2014) by C J Fuller and Haripriya Narasimhan; 2. *The Caste of Merit: Engineering Education in India* (Harvard University Press, 2020) by Ajantha Subramanian.

The nexus between slavery and university-building are well documented in the north American context. The nexus between caste privilege and post-colonial nation building and the upper caste monopoly in Indian academia is not well explored. *The Caste of Merit* speaks to this and to much more.

Seen in the light of Indian caste system, which is divided based on four major occupational varnas, the artisan castes are the ones best suited to study and excel in the field of Engineering. However, ever since the inception of India's technical institutes – the IITs – the upper castes tend to dominate the arena. Building on the works of Pierre Bourdieu and Satish Deshpande, Ajantha in her work – through archival research and ethnography – explores the eventful history of colonial technical education, the post-colonial nation building, IITs as islands of academic excellence with unfettered powers in administration and faculty recruitment, the upper caste dominance in IITs in general and the Tamil Brahmin monopoly in IIT Madras in particular, the upper-caste claims to merit on the face of efforts to democratize Indian engineering academia.

Unlike other parts of the Indian subcontinent the then Madras presidency and the now Tamil Nadu is a particular case in point known for its anti-*brahminical* and pro-backward-caste movement. Having defeated their places of dominance through communal GO and the caste-based reservations in higher education and state employment, the Tamil Brahmins started disassociating themselves as supra-regional and supra-caste group from the 'parochial' Dravidian movement. The founding of IIT Madras through German sponsorship had come at an opportune time for the Tamil Brahmins. Unlike other castes in the region their relative educational advancement helped the Tamil brahmins to secure admissions *en masse* into the IIT Madras. The Tamil Brahmins soon made IITM an island of their monopoly. Be it the expansion of reservation for Dalits and Adivasis in IITs in the 1970s or the Mandal implementation in the '90s or the proliferation of coaching institutes through which 'other' castes started getting admissions in the IITs through the mass entrance examination called the JEE, the Tamil Brahmins always resorted to foregrounding, what Ajantha calls, 'uppercasteness' through claims of merit. For Tamil Brahmins merit is admission through general category, being cosmopolitan, to be able to study in CBSE schools, in being able to clear JEE without having to resort to *rote-learning*, in being able to get IT department, and in being able to become a diasporic citizen and to work in the Silicon Valley.

Through this decade long stellar contribution Ajantha unpacked uppercaste claims to merit which is contingent not just on academic prowess but also on the historical advantage and socio-cultural capital as she had shown empirically. *Caste of Merit* is going to remain a go-to work for decades to come especially given the recent promulgation of reservation based on economic criterion, agitations by Maraths, Patidars, and Vanniyars in claiming reservation or special reservation, as the case may be.




*The Caste of Merit: Engineering Education in India*
Ajantha Subramanian
Harvard University Press, 2020.

## அம்பேத்கரின் வரலாற்று அணுகுமுறை என்ன?

எழுத்தாளர் ஜெயமோகன்

ஒவ்வொரு ஆண்டும் டாக்டர் அம்பேத்கர் பிறந்த தினத்தை முன்னிட்டு Egalitarians அம்பேத்கர் நினைவு சிறப்புரை ஒன்றை ஒருங்கிணைக்கத் திட்டமிட்டது. இவ்வாண்டு எழுத்தாளர் ஜெயமோகன் "அம்பேத்கரின் வரலாற்று அணுகுமுறை என்ன?" என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். அவ்வுரையின் எழுத்து வடிவம் இங்கே.

அனைவருக்கும் வணக்கம்...

இந்த அமைப்பினுடைய (Egalitarian) நோக்கம் என்ன?, எங்கிருந்து தொடங்கியது? என்பது பற்றி இதனுடைய அமைப்பாளர்கள் எழுதிய குறிப்பு என்னுடைய இணைய பக்கங்களில் வெளிவந்திருந்தது. கல்வி நிலையங்களில் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் ஒடுக்கப்படுவதை, குறிப்பாக உயர் சாதியினரிடமிருந்து கல்வி நிலையங்களில் இருக்கக்கூடிய பாரபட்சங்களைப் பற்றி கவனப்படுத்துவதற்காகவும் அவற்றை ஒரு பொதுவெளி விவாதமாக மாற்றும் பொருட்டும் "Egalitarians" என்ற இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சி அந்த முயற்சியை கவனப்படுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த முதல் உரை எனது நண்பர் வே.அலெக்ஸ் அவர்களின் நினைவுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது. அலெக்ஸ் மறைந்து ஆண்டுகள் கடந்து கொண்டு இருக்கிறது. அவருடைய நினைவை இன்னும் பெரிதாக ஒவ்வொரு நாளும் உணர்ந்து கொண்டே இருக்கிறேன். அதற்கு பல காரணங்கள் இருந்தாலும் முக்கியமான காரணம் அவரும் நானும் ஒரே வயது என்பது. இதில் நான் என்ன சொல்கிறேன் என்பது என்னுடைய வயதை அறிந்தவர்களுக்கு புரியும். மிக நெருக்கமான நண்பராக மிக தனிப்பட்ட விஷயங்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடிய ஒரு சிலரில் ஒருவராக இருந்தார். இந்த அரங்கில் அவரை நினைவுகூர்ந்து மீண்டும் ஓர் அஞ்சலியை செலுத்திக் கொள்கிறேன்.

நண்பர்களே சில ஆண்டுகளுக்கு முன்பு இராஜபாளையம் என்கிற ஊரிலே 'இலக்கியமும் அறமும்' என்ற தலைப்பிலே ஓர் உரையாற்றும் பொருட்டு நான் அழைக்கப்பட்டேன். 'Ethics' என்ற வார்த்தைக்கு சமானமாய் இங்கே 'அறம்' என்ற வார்த்தை பயன்படுத்துகிறேன். அதாவது இலக்கியத்தில் அறம் எவ்வாறு வெளிப்படுகிறது?; அதனுடைய பங்களிப்பு என்ன?; காலகாலங்களில் அறம் சார்ந்த விஷயங்கள் எவ்வாறு மாறி வருகின்றன என்பதைப் பற்றி அந்த விவாதம். அந்த உரையை 'அம்பேத்காரின் தம்மம்' குறித்து ஆக்கிக்கொண்டேன். 'புத்தரும் அவரது தம்மமும்' என்ற நூலிலிருந்து அம்பேத்கர் தம்மம் என்ற, அறம் என்ற கருத்தை எப்படி வரையறுக்கிறார் எப்படி முன்னெடுத்து செல்கிறார் என்பதை அந்த உரையில் சொன்னேன். அந்த உரை முடிந்த பிறகு 'அலெக்ஸ்' என்னிடம் ஒரு விஷயத்தைச் சொன்னார். "ஜே, இந்த உரை... நீங்க என்ன சொன்னீங்கங்குறது முக்கியம்தான், ஆனால் அதைவிட முக்கியம் இந்த அரங்கில் இந்த உரையை நீங்க ஆற்றியது. ஏன்னா இது தலித் அரங்கு அல்ல. இது ஒரு இலக்கியத்துக்கான அரங்கு." தமிழில் அம்பேத்கரை பற்றி யாராவது ஏதாவது சொல்லவேண்டும் என்றால் அது தலித் மேடையாக இருக்கும் அல்லது தங்களை முற்போக்காக காட்டிக்கொள்ளும் பொருட்டு பல பெயர்களில் ஒன்றாக அம்பேத்காரின் பேரை சொல்லுவார்கள். தன்னுடைய வாழ்க்கையை வாழ்க்கையுடைய துயரங்களில் சிந்தனையில் சமூக பார்வையில் என்ன என்ன மாற்றங்கள் நிகழ்ந்தது என்பதை இயல்பாக பேசக்கூடிய ஒருவர் தன்னியல்பாக அம்பேத்காரை மேற்கோள் காட்டுவது, தலித் அல்லாத ஒருவர் மேற்கோள் காட்டுவது மிக மிக அரிது. அநேகமாக கிடையாது.எனக்கும் என் குழந்தைக்குமான உறவை பற்றி நான் பேசும்போது இயல்பாக அம்பேத்கர் அங்கே கடந்து வந்தார் என்றால் தான் அவர் என்னை பாதிக்கிறார். ஒரு சிந்தனையாளராக என்னுடன் உரையாடலில் இருக்கிறார் என்று பொருள். தலித்துகளிடம் பேசும்போது அம்பேத்கார் ஒரு தலித்தலைவர், அவர்மேல் நான் மரியாதை வைத்திருக்கிறேன் என்பதற்கு பேர் அம்பேத்காருடன் நான் உரையாடலில் இருக்கிறேன் என்பதல்ல. அன்று அலெக்ஸ் அதை சொன்னது எனக்கு ஒரு பெரிய திறப்பாக அமைந்தது. அதன்பிறகு அதைப்பற்றி யாராவது அப்படியாக ஏதாவது சொல்கிறார்களா என்று நான் பார்த்து கொண்டே இருந்தேன். ஏனென்றால் எனக்கும் அம்பேத்காருக்குமான உறவென்பது எனக்கும் என் எல்லா ஆசிரியர்களுக்கும் இருக்கும் உறவை போல சிக்கலானது. நம்மிடம் உரையாடும் ஒருவரிடம் நாம் வழிபாட்டு உணர்வு மட்டும் கொண்டிருப்பதில்லை. சுந்தர ராமசாமியிடமோ, நித்ய சைதன்ய யதியிடமோ 'சரிதாம் போயா' என்று சொல்லாதா தருணம் நமக்கு வாய்ப்பதில்லை. ஏனென்றால் ஒரிஜினல் சிந்தனையாளர்கள் , நம்மை பாதிக்கிறார்கள்; தொந்தரவு செய்கிறார்கள்;

உடைத்துவிடுகிறார்கள். அம்பேத்காருடன் அவ்வாறு ஒருவிதமான நட்பு, பகை, பூசல், சண்டை என்கிற உறவுதான் எனக்கு. கிட்டத்தட்ட காதல் மாதிரி தான். காதல்ல சண்டை தான் போட்டுக்குவோம். சில விஷயங்களை ஏற்றுக்கொள்ள முடியாது என்று நான் அவருடைய புத்தகத்தையே கிழித்திருக்கிறேன். முதலில் தூக்கிவச்சிட்டு வெளியில போய் நடந்துட்டு வந்து திருப்பி பாத்துருக்குறேன். ஆன விலக முடியாது. ஏறத்தாழ முப்பது ஆண்டுகளாக பெரும்பாலும் எல்லா நாட்களும் ஏதோவகையில் நான் புலங்கக்கூடிய சிந்தனையாளர்களில் ஒருவராக இருந்திருக்கிறார்.

இந்த உரையை ஆற்றும் போது இதை ஏன் சொல்கிறேன் என்றால் இந்த உரை யாருக்காக ஆற்றப்படுகிறது என்பதை தெளிவுபடுத்த விரும்புகிறேன். வழக்கமாக அம்பேத்காரை பற்றி பேசும் போது, 'அம்பேத்கார் ஒரு தலித் சிந்தனையாளர்:தலித் புரட்சியாளர்' என்கிற ஒரு அடையாளத்தோடு மட்டும் தான் பார்க்கிறார்கள். அந்த அடையாளத்தோடு இந்த உரை நிகழ்த்தப்படவில்லை. அவருடைய ஆளுமையின் சிறு பகுதி தான் அது. அடிப்படையில் அவரது ஆளுமை என்பது ஒரு அறவியலாளர் என்பதுதான். 'Ethics' துறையில் ஒரு தத்துவ ஞானி என்பது. ஒருவேளை 100 ஆண்டுகளுக்கு பிறகு இந்தத் தலித் பிரச்சினைகள் இல்லாமல் ஆகிவிட்டால், ஒரு 150 ஆண்டுகளுக்கு பிறகு வரலாற்றில் மட்டும் தான் இப்படி ஒரு பிரச்சினை இருந்தது என்பது தெரியும் என்றால் , அன்று அம்பேத்கார் இருப்பாரா? அன்று அறவியலாளராக இருந்து கொண்டு இருப்பார். மானுட அறத்தின் சில அடிப்படை கேள்விகளை முன்னெடுத்தவர். அவற்றை அடுத்த காலகட்டத்துக்கு கொண்டு சென்றவர். அவற்றை வரலாற்றுடனும் சட்டவியலுடனும் இணைக்க முயன்ற அளவில் ஒரு தத்துவஞானி என்ற அளவில் அவரது இடம் இருந்து கொண்டு இருக்கும். ஆகவே தமிழ்ச் சூழலில் இந்த வழக்கமான அரசியல் சொல்லாடல்களிலிருந்து வரக்கூடிய தலித் சிந்தனையாளர் அம்பேத்கார் என்ற ஒரு 'டெம்ப்லேட்' ஐ தாண்டி போய் ஒரு சில விஷயங்களை பேச வேண்டி இருக்கிறது. ஆகவேதான் இந்த தலைப்பை நான் தேர்ந்தெடுத்து இருக்கிறேன். அம்பேத்காருடைய இலக்கிய பார்வை என்ன? அம்பேத்கருடைய அறவியல் பார்வை என்ன? அம்பேத்காருடைய வரலாற்று பார்வை என்ன? அம்பேத்காருடைய அழகியல் நோக்கு என்ன? சிற்பங்களைப் பற்றி அவர் என்ன நினைப்பார்? என்றெல்லாம் பேச வேண்டிய காலம் நெருங்கி வருகிறது. அப்பொழுதுதான் ஒரு சிந்தனையாளரை முழு மனதாக ஏற்றுக்கொள்கிறோம். ஆகவே திரும்பத் திரும்ப 'அம்பேத்கார் தலித் சிந்தனையாளர்' என்ற 'டெம்ளேட்' க்குள் நின்று யோசிக்கிறவைகளுக்கு , இந்த உரை அவர்களுக்கானது அல்ல. ஏனென்றால் இராஜபாளையத்தில் என்னுடைய உரை முடிந்து வந்த போது அங்கு வந்த நபர்கள் பல பேர் "அம்பேத்கார் ஒரு தலித் சிந்தனையாளர் நீங்க எதிக்ஸ் ல மட்டும் நிறுத்திடீங்க" என்று கேட்டனர். அவர்களுக்கு தெரிந்த ஒன்றைப் பற்றி பேச வேண்டும் என்று நினைக்கின்றனர். எனவே அவர்களுக்கான உரை அல்ல இது. அம்பேத்காரியர்கள் என்று சொல்லிக் கொண்டு களத்தில் நிற்போருக்கான உரை அல்ல. அவர்களுக்கு ஒரு வேலை இது தேவை இல்லாமல் இருக்கலாம். வழக்கமாக தமிழில் ஒரு பொலிடிகல் கேரக்டர் இருக்கு. சில பெயர்களைச் சொன்னால் நீங்கள் முற்போக்காக கருதப்படுவீர்கள். அந்தக் களத்தில் அம்பேத்காரின் பெயரை சொல்லிக்கொண்டு நிற்போருக்கான உரையும் அல்ல. வரலாற்று ஆய்வாளருக்கான உரையும் அல்ல. ஏனென்றால் பல விஷயங்கள் அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும். ஆகவே இது யாருக்கான உரை என்று பார்த்தால் வரலாற்றை, சமகால சிந்தனைகளைத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் கொண்ட, சிந்திக்க கூடிய ஒரு வட்டத்திற்கான உரை. அவர்கள் இந்த நூற்றாண்டுடைய அத்தனை மகத்தான சிந்தனையாளர்களையும் அறிந்திருக்க வேண்டும், அவர்களுடன் உரையாடல்களை மேற்கொள்ள வேண்டும். அந்த வரிசையில் வரக்கூடிய ஓர் ஆளுமை இந்திய வரலாற்றில் தவிர்க்க முடியாத ஆளுமை என்ற அளவில் மட்டும் தான் இங்கே அம்பேத்காருடைய சிந்தனைகளை பற்றி நாம் பேச இருக்கிறோம். நண்பர்களே! வரலாறு என்பது என்ன? இந்த விளக்கங்கள் ஏன் அளிக்கிறேன் என்றால் ஒட்டுமொத்தமாக இந்த உரைக்குப் பிறகு இந்த கேள்வி வரக்கூடாது என்பதற்காக. வரலாறு என்பது எப்போதும் இருந்து கொண்டு இருக்கிறது. சிறு பழங்குடியினருக்கு கூட வரலாறு உண்டு. ஒரு ஒருமணிநேரம் பேசினால் ஒரு சின்ன பழங்குடித் தலைவர் ஒருவர் அவருடைய வரலாற்றை சொல்வார், அதை நீங்கள் பார்க்கலாம். வரலாறு என்பது தங்களுக்கு ஒரு நேற்றைய தொடர்ச்சியை உருவாக்கிக்கொள்ள ஒவ்வொரு சமுதாயத்திற்கும் தேவைப்படுகிறது. மொழிவடிவில் பதியப்பட்ட ஒன்றுதான் வரலாறு. ஏதோ ஒரு வகையில் சொல்லப்பட்டால்தான் வரலாறு சொல்லப்படாவிட்டால் வரலாறு இல்லை. உதாரணமாக ஒரு இனக்குழு அல்லது ஒரு சமூகம் தன்னுடைய வரலாற்றைப் பற்றிய உணர்வே இல்லாமல் சொல்லாமல் இருந்தால் அவர்களுக்கு வரலாறு இருக்கிறதா? என்றால் இல்லை. விலங்குகளுக்கு வரலாறு இல்லை. தன்னுணர்வுடன் தனக்கு ஒரு இறந்த காலத்தின் தொடர்ச்சியை கட்டமைத்துக்கொள்ளக்கூடிய சமூகங்கள் உருவாக்கிக்கொள்கின்றன வரலாற்றை. அவ்வாறு வரலாறு என்ற

ஒன்று உருவாகி இருக்கிறது. பலவேறு வகையான வரலாறுகள் இருக்கின்றன. இனக்குழு வரலாறு, சமூக வரலாறு, மத வரலாறுகள், தேசங்களின் வரலாறுகள். வரலாறு வேறு வரலாற்றுஎழுத்து வேறு. *HISTORY* வேறு *HISTORIOGRAPHY* வேறு. நான் இங்கே பேசப் போவது *HISTORIOGRAPHY* ஐ பற்றி மட்டும் தான். வரலாற்றை எழுதுவதைப் பற்றி மட்டும் தான் வரலாற்று எழுத்து முறை. வரலாறு ஒவ்வொரு தேவைக்காக பல்வேறுவிதமாக விதமாக எழுதப்படுகிறது. வரலாற்றை எப்படி எழுதுகிறோம் என்பதைக் கொண்டு வரலாற்றை பலவிதமாக பிரிக்கலாம். ஒரு முன்னுரையாக இங்கே வரலாற்றின் இந்த முகங்களை சொல்லலாமென்று நினைக்கிறேன். நான் ஏற்கனவே சொன்னேன் பழங்குடிகளுக்கு கூட வரலாறு இருக்கிறது. அத்துணை சமூகங்களுக்கும் வரலாறு இருக்கிறது. ஆனால் அந்த வரலாறு பொதுவாக இரண்டு பிரிவுகளாக இருக்கிறது. ஒன்று வாய்மொழி வரலாறு இன்னொன்று எழுத்துமொழி வரலாறு. வாய்மொழி வரலாறு என்பது பெரும்பாலும் *folk history* என்று சொல்லாடுவது நாட்டார் வரலாறு என்பது, நெகிழ்வானது, தொடர்ந்து உருமாற்றம் அடைவது, பல படிகளாக செயல்படுவது, ஒரு வகையான நிலைத்த தன்மை இல்லாத வரலாறு. ஒழுகும் வரலாறு என்று அதைச் சொல்லலாம். அந்த ஒழுகக் கூடிய வரலாறை ஒரு நிலைத்த தன்மை கொண்டு வரும் பொருட்டுதான் அது எழுதப் படுகிறது. எழுதப்படும் வரலாறு என்பது மூன்று தேவைகளுக்காக செய்யப்படுவது. ஒன்று நிலைக்க வைப்பதற்காக இதுதான் வரலாறு என்று எழுதி வைத்துக்கொள்ளுவதற்காக 'எழுதிவச்சுகோ' என்று நாம் சொல்கிறோம் இல்லையா? எழுதி வைத்தால் அது மாறாது என்ற எண்ணத்தில் தான். அப்போது ஒரு சமூகத்தின் வரலாறு மாற்றப்படல் ஆகாது இப்படியே இது நிலைக்க வேண்டும் என்று நினைக்கும் போது தான் அது எழுத்து வடிவிற்குள் வருகிறது. இரண்டாவது, தொகுப்பு தன்மைக்காக வரலாறு எழுதப் படுகிறது. ஒரு தனி சமூகம் பலவேறு சமூகங்களை இணைத்துக்கொண்டு கூட்டுச்சமூகங்களாகும் போது அனைவருக்கும் பொதுவாக ஒரு வரலாறு எழுத வேண்டி இருக்கிறது, அது புறவயமான வரலாறு. நாட்டுப்புற வரலாறு அதுக்கு போதாது. அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பொது வரலாற்றை உருவாக்கும் பொருட்டு ஒரு தொகுப்பு தன்மைக்காக எழுத்து வரலாறு உருவாக்கப் படுகிறது. மூன்றாவது, ஆதிக்கத்திற்காக, அரசு அமைவதற்காக, மதமும் பேரரசுகளும் உருவாவதற்காக வரலாறு எழுத்து வடிவில் எழுதப்படுகிறது. எழுதப்பட்ட வரலாறு அந்த வரலாற்றின் போக்கிலேயே மேல்கீழ் அடுக்குகளை உருவாக்கும். அது எதுவாக இருந்தாலும் சரி. யார் ஆள வேண்டும், யார் ஆளப்பட வேண்டும் என்பதை அந்த வரலாறு உருவாக்கும். அதிகாரம் உள்ள அடக்கம் இல்லாத அதிகாரத்தை உள்ளடக்காத வரலாறு என்பது இல்லை, எழுதப்பட முடியாது. யாருடைய அதிகாரம் எப்படிப்பட்ட அதிகாரம் என்பது வேறு படும். இந்த மூன்று காரணங்களுக்காக எழுதப்பட்ட வரலாறு உருவாகிறது. இவ்வாறு வரலாறு இரண்டு பிரிவுகளாக இருக்கிறது. இந்த எழுதப்பட்ட வரலாற்றிலேயே இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று தொல்வரலாறு இன்னொன்று நவீன வரலாறு. தொல்வரலாறு என்பது உலகெங்குமே இரண்டு பாணிகள் கொண்டது. ஒன்று, தொன்மங்கள் புராணங்கள். அதாவது ஐதீகங்கள் என்று அவர்கள் சொல்வார்கள். அதுவும் ஒரு வகையான வரலாறுதான். ஒரு ஊருக்கு சென்றால் அந்த ஊரினுடைய வரலாறு என்பது ஒரு தொன்மமாக ஒரு கதையாக மாறி அங்கே சொல்லப்படுகிறது. உலகம் முழுக்க சென்ற காலங்களில் வரலாறு என்பது புராண வடிவிலே தான் இருந்தது. ஏசுவுடைய வரலாறும் ஒரு வகையான புராணம் தான். புத்தருடைய வரலாறும் புராணம் தான். அது ஒரு பழைய வழி என்று சொல்லலாம். தொல் வரலாற்றின் இரண்டாவது வழி என்பது நிகழ்வு குறிப்பு தன்மை. *chronicles* என்று சொல்வார்கள். வரலாறு முழுக்க நமக்கு புகழ் பெற்ற *chronicles* கிடைக்கின்றன. அதாவது அன்றாட நிகழ்வை குறித்து வைப்பது. ஒரு தொடர்ச்சிக்காக, ஒரு நடைமுறை தேவைக்காக ஒரு நினைவுக்காக குறித்து வைப்பது. இந்த இரண்டு வடிவில் நமக்கு தொல் வரலாறுகள் எழுதப்பட்டிருக்கின்றன. தமிழக வரலாற்றை எடுத்துப் பார்த்தால் ஸ்ரீ ரங்கம் ஆலயத்தின் தொன்மம் ஒரு வரலாறு இருக்கிறது. ஸ்ரீ ரங்கம் கோயில் ஒழுகு ஒரு வகையான வரலாறு. ஆதி சங்கருடைய வரலாறை எடுத்துப் பார்த்தால் ஆதி சங்கருடைய தொன்மங்கள் ஒரு வகையான வரலாறு குருபரம்பரை என்ற பெயரிலே ஆதி சங்கருடைய மரபைப் பற்றிய *chronicle* இன்னொரு வகையான வரலாறு. இவை இரண்டும் இணைந்து தான் தொல்வரலாறுகளை உருவாக்குகின்றன. ஐரோப்பாவில் குறிப்பாக கிரேக்க, ரோம மரபை எடுத்துக்கொண்டால் தொன்ம வரலாறு என்பது இரண்டாம் இடமாகவும் *chronicle* என்பது முதலிடத்திலும் இருக்கிறது. ஆகவே அவர்கள் இன்னும் புறவயமான இன்னும் பொதுவான வரலாறுகளை முன்னரே எழுதிவிட்டார்கள். இந்தியாவில் தொன்ம வரலாறு மேலிருக்கிறது. *chronicle* என்பது மிக குறைவாகவே இருக்கிறது. நம்முடைய வரலாறு என்பது பெரும்பாலும் தொன்மங்களாக கதைகளாக மட்டுமே இருக்கிறது. இதை எதற்கு சொல்கிறேன் என்றால் பொதுவான அறிவார்ந்த விவாதங்களில் தொன்ம வரலாறு என்பது தொன்மம் மட்டும்தான் வரலாறு அல்ல. அதாவது நமக்கு வரலாறு கிடையாது என்ற ஒரு பேச்சும் எழுவதுண்டு. வரலாற்று ஆசிரியரான டி. டி. கோசாம்பி இந்திய வரலாறுக்கு

*ஒரு முகவுரை என்ற அவருடைய நூலின் முகப்ப்பிலேயே இந்தியாவில் வரலாறு எழுதப்படவில்லை. வரலாறு எழுத வேண்டியிருக்கிறது. வரலாறு இல்லை என்று எழுதுகிறார். அதாவது பழைய வரலாறே ஒரு வரலாறு என்று எடுத்து கொள்ளப்படுகிறது. சென்ற காலத்திய ஐரோப்பிய சிந்தனையாளர்களும் இதைத் தொடர்ந்து நம்மிடம் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆப்பிரிக்க ஆசிய நாடுகளுக்கோ வரலாறு இல்லை என்று கூறுகிறார்கள். நாட்டுப்புற வரலாறுகளும் வரலாறுகள் தான். வாய் மொழி வரலாறுகளும் வரலாறுகள் தான். இப்பக்கம் எழுத்து மொழியிலே குறிப்புத் தன்மையுடைய எழுத்துக்களும் வரலாறு கொண்டிருப்பதும் இந்த வரலாறுகள் ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கின்றன. இதனுடைய இன்னொரு தொடர்ச்சியாக உருவானது தான் நவீன வரலாறு என்பார்கள். இந்த உரையில் நாம் பேசிக் கொண்டிருப்பதும் நவீன வரலாறு தான். இதனுடைய இன்னொரு தொடர்ச்சியாக உருவானது தான் நவீன அதுதான் என்பர். நவீன வரலாற்றைப் பற்றிப் பேசும் தருணத்தில் அந்த விவாதத்தை குழப்பும் பொருட்டு நாட்டுப்புற வரலாறையோ பழைய வரலாறையோ கொண்டுவரக்கூடாது. என்பதற்காகத்தான் நான் இங்கு விளக்குகிறேன். நவீன அதுதான் என்பது என்ன என்று பார்த்தால் ஏறத்தாழ பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் உருவாகிவந்த ஒருவகையான வரலாற்றைத்தான் நாம் நவீன அதுதான் எண்டு கூறுகிறோம். அதற்கு கிரேக்க மரபிலே ஒரு தொடர்ச்சி இருக்கிறது. க்ரேட்டேடஸ் எழுதிய அதுதான் அதற்க்கு ஓர் முன்னுதாரணமாய் திகிழ்கிறது. அது ஒரு மிகத்தொன்மையான வரலாறு. அனால் அதிலே புறவயத்தன்மை இருக்கிறது. ஆசியனுடைய கருத்துக்களுக்கு அப்பால் தகல்வல்களை மட்டுமே முன்வைக்கக்கூடிய அதுதான் அதுதான் நவீன வரலாற்றினுடைய முதல் அடிப்படை. இரண்டாவதாக நிரூபிக்கப்படக்கூடிய கொள்கைகள் வழியாக வரலாற்றை சொல்வது. ராஜராஜசோழன் காலத்தில் உணவு உற்பத்தி பெருகியது என்றால், சில காரணங்களால் அது பெருகவில்லை என நிரூபிப்பதற்கான வாய்ப்பிருக்கிறது. தகவல்கள் புறவயமானவையாக இருக்க வேண்டும். நெறிகள் புறவயமானவையாக இருக்க வேண்டும். அதுதான் நவீன வரலாறு. இந்த வரலாறு ஐரோப்பாவில் படிப்படியாக உருவாகிவருகிறது. சீனாவில் ஒரு வகையான வரலாறு இருந்திருகிறது. சமீபகாலத்தில் அதைப்பற்றி பேசுகிறார்கள். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவேய சீனாவில் புறவயமானதாக இருந்திருக்கிறது. அதற்கு ஐரோப்பிய வரலாறு ஒரு முன்னுதாரணம். வால்டேயர், எட்வர்ட் கிப்பான், டேவிட் ஹ்யும் போன்றவர்கள் எழுதிய வரலாறு. இந்த மூன்று பேரைத்தான் நவீன வரலாற்றின் பிதாக்கள் என்று கூறுவார்கள். கிப்பான் எழுதிய ரோமப்பேரரசின் எழுச்சியின் வீழ்ச்சி என்ற புத்தகம் ஒரு முன்னுதாரணம் என்று கூறுவார்கள். இந்த நவீன வரலாறு எழுதும் முறை ஐரோப்பிய பல்கலைகழகங்களிலே மிகப்பெரிய செல்வாக்கை செலுத்துகிறது. ஆக்ஸ்போர்டும், கேம்பரிட்ஜூம் அதனுடைய பயிற்சி களங்களாக இருக்கின்றன. சார்போனிலும், ஆக்ஸ்போர்ட்டிலும், கேம்பிரிட்ஜிலும் பயின்ற ஐரோப்பியர்கள் காலனி ஆதிக்கம் உருவாக்கும் பொருட்டு உலகமெங்கும் பயணம் செய்கிறார்கள். உலக நாடுகளை வெல்கிறார்கள். அந்த நாடுகளின் நவீன வரலாற்றை நவீன முறையில் எழுத ஆரம்பிக்கிறார்கள். அப்பொழுதுதான் உலகிற்கு நவீன வரலாறு வர ஆரம்பிக்கிறது. இந்த நவீன வரலாற்றில் இருக்க கூடிய வெவ்வேறு பள்ளிகள் வெவ்வேறு எழுத்து முறைகளை நாம் பார்க்கிறோம். இந்தியாவை பொறுத்தளவில் நம்முடைய முதல் வரலாற்று எழுத்தென்பது காலனி ஆதிக்கவாதிகளால் எழுதப்பட்டது. அதை காலனி ஆதிக்க வரலாறு என்று சொல்வார்கள். அந்த காலனி ஆதிக்கவாதிகள் இந்தியாவை பற்றி ஒரு வரலாற்றை எழுதி உருவாக்கினார்கள். தங்களுடைய தேவைக்காகவும், இந்தியர்களுக்கு ஒரு வரலாற்று உணர்வை அளித்து அவர்களை ஒருங்கிணைப்பதற்காக இந்த வரலாற்றை அவர்கள் எழுதினார்கள். அந்த வரலாற்றின் மேல் ஒரு விமர்சனமாக அதுபோதாது என்றுகண்டு, வேறொரு வகையான வரலாற்றை எழுத முற்பட்டவர்களை நாம் தேசிய வரலாற்று ஆசிரியர்கள் என்று சொல்கிறோம். தேசிய வரலாற்று ஆசிரியர்களின் வரலாற்று எழுத்து முறை என்பது ஒரு முதலாளித்துவ சார்பு கொண்டது என்று சொல்லி ஒரு மார்சிய வரலாற்று எழுத்து முறை மூன்றாவதாக இந்தியாவிலே உருவாகிறது. இந்த மூன்று வரலாற்று எழுத்து முறைகளும்தான் மிகப்பிரபலமாக, நெடுங்காலமாக இருந்து வருகின்றன. இந்த மூன்று வரலாற்று எழுத்து முறைகளுக்கும் வெளியே , இந்த மூன்று எழுத்து முறைகளால் தொடப்படாத ஒன்று உள்ளது என்று 1990களில் ஒரு விவாதம் வந்தது. புறநடையாளர்கள் (marginalaised people), வெளியே தள்ளப்பட்டவர்கள், சமூக கட்டமைப்புக்கு வெளியே இருப்பவர்கள் பற்றிய வரலாறு. அதை marginalaised history என்பர். இந்த வரலாறை எடுத்துப் பார்த்தால் j. s. mill பிரிட்டீஷ் காலனி ஆதிக்க வரலாற்றை எழுதினார். பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியுடைய வரலாறை எழுதினார். தொடர்ந்து " cambridge history of india" என்ற பெயரிலே ஒரு ஐந்து தொகுப்புகள் வந்தன. இவைதான் இந்திய வரலாற்றை பற்றிய காலனி ஆதிக்கவாதிகளுடைய முதல் விரிவான சித்திரம். நண்பர்களே இந்த விவாதத்தில் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். காலனி ஆதிக்க வரலாறு*

என்று சொல்லும்போது , அது மோசடி வரலாறு என்றோ, பொய் வரலாறு என்றோ, தவறான வரலாறு என்றோ நான் சொல்ல மாட்டேன். வரலாற்று மாணவர் எவரும் சொல்ல மாட்டார்கள். ஏனென்றால் பேரறிஞர்களால் மிகப்பெரிய உழைப்பால் எழுதப்பட்ட வரலாற்று சாதனைகள் அந்த எழுத்துக்கள். அறிஞர் எவரும் அதை தாண்டி கடந்து போக முடியாது அவ்வளவு எளிதாக. ஏனென்றால் இன்றைக்கு கடந்த 10 ஆண்டுகளாக மொத்த காலனி ஆதிக்க வரலாறுகளையும் இடது கையால் தூக்கி போடக்கூடிய ஒரு அறிவிலித்தனம் அறிவுத்துறையில் ஒலிக்க ஆரம்பித்திருக்கிறது. அதற்கெதிரான குரலாக இதை சொல்கிறேன். தமிழக வரலாற்றை எடுத்துப்பர்த்தால் Madura country manual எழுதிய J. H. Nelson ஒரு மகத்தான வரலாற்று ஆசிரியர். வரலாற்றை விடுங்கள், மொழிநடைக்காகவே படிக்க வேண்டிய புத்தகம். வரலாற்றை எப்படி எழுத வேண்டும் என்பதற்கு முன்னுதாரணமான புத்தகம். ஒரு கிளாசிக்கான புத்தகம். அதில் கிடைத்த தகவல் அனைத்தையும் கொண்டு சங்ககாலம் முதல் நாயக்கர் ஆட்சி வரைக்குமான தமிழகத்தினுடைய ஒரு வரலாற்று சித்திரத்தை அவர் உருவாக்குகிறார். மிக முன்னோடியான முயற்சி. அன்று இருந்த கலெக்ட்ர்கள் அடுத்த காலகட்டத்திற்கு தன்னை தொடர்ந்து வரக்கூடிய கலெக்டருக்காக தனக்கு கிடைத்த அனைத்து தகவல்களையும் தொகுத்து அளிக்ககூடிய ஒரு வழக்கு இருந்தது. அதற்கு பெயர்தான் manuals. அந்த manual அனைத்துமே வரலாற்று குறிப்புகளாக இருந்தன. அதில் classic என்பது J. H. Nelson உடைய Mathura country manual. அதிலிருந்துதான் காலனி ஆதிக்க வரலாறு எழுதப்படுகின்றன. போற்றி வணங்கத்தகுந்த மகத்தான காலனி வரலாற்று ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அவர்களால்தான் இந்தியா என்கிற ஒட்டுமொத்தத்தைக் கற்பனை செய்ய முடிந்தது. சில நிலப்பகுதி வாழ்க்கை முறைகளை இணைத்து வரலாற்றை உருவாக்க முடிந்தது. இனவரலாற்றுடைய விதிகளை அவர்கள் உருவாக்கினர்கள் (புறவயத்தன்மை). அவர்களுடைய பாதை காலனி ஆதிக்க தன்மை கொண்டதாக இருக்கலாம். அதை நீ கடந்து செல்லலாம். அதன் பிறகு பந்தர் கார் போன்ற தேசிய வரலாற்று ஆசிரியர்கள் வந்தார்கள். தமிழக வரலாற்றிலே நீலகண்ட சாஸ்திரி மற்றும் சதாசிவ பிரம்மேந்திரர் போன்றோர் சிறந்த உதாரணம். தேசிய பெருமித பார்வையிலே வரலாற்றை எழுதினார்கள். தேசியத்துடைய உயர்வை மற்றும் சாதனைகளை எழுதியவர்கள். இந்த வரலாற்றிற்கு அடுத்தப்படியாக வந்த வரலாறு என்பது மார்க்சிய வரலாறு. இரண்டு பேர் அதற்கு முக்கியமானவர்கள். அவர்களில் எம். என். ராய் மார்க்சிய வரலாற்று ஆய்விற்கான ஒரு முன்வரைவை  உருவாக்கியவர். டி. டி. கோசாம்பி மார்க்சிய வரலாற்று ஆய்வின் ஒரு விரிந்த சித்திரத்தை உருவாக்கியவர்.பிறகு இன்றைய காலத்தில் இருக்கக்கூடிய அத்தனை மார்க்சிய வரலாற்று ஆசிரியர்களும் டி. டி. கோசாம்பி அவர்களின் பாணியை சேர்ந்தவர்கள் என்றுதான் வரையறுக்கிறார்கள். நலனி கூகா, கியான் பிரகாஷ் ஆகியோர்களால் 90-களில் மார்க்சியஸ் வரலாறு உருவானது  இதுதான் நவீன இந்திய வரலாற்றின் சித்திரம். இதில் அம்பேத்காருடைய இடம் என்ன? அவர் என்ன சொல்கிறார் என்பதை அடுத்தப்படியாக பார்க்கலாம். நான் ஏற்கனவே கூறியது போல் அம்பேத்கார் வரலாற்று ஆசிரியராக செயல்பட்டவர் அல்ல. அவருடைய முதன்மை ஆர்வம் என்பது ethics, சட்டம், மற்றும் அரசியலில் இருந்தது. பொதுவாக இன்றைக்கு தொகுத்து பார்த்தால் அவர் அதிகம் பேசியது ethics தான் உள்ளது. வரலாற்று ஆசிரியராக அவருடைய இடையம் என்பது ஒரு வகையில் இரண்டாம் பட்சமே.

இரண்டாவதாக அவர் வரலாற்று ஆசிரியராக அதிகம் செயல்படவில்லை. செயல்படக்கூடிய காலகட்டத்திலே இந்தியாவின் வரலாற்று காலத் தரவுகள் மிகக் குறைவாகத்தான் கிடைத்தது. கல்வெட்டுக்கள் அதிகம் படிக்கப்படவில்லை, தொகுக்கப்படவில்லை. செப்பேடுகள் கிடைக்கவும் இல்லை, படிக்கவுமிஇல்லை. ஆனால் இதற்கெல்லாம் மேலே இன்னொன்று உள்ளது. உதிரி உதிரியாக ஆங்காங்கே செய்யப்படக்கூடிய ஆய்வுகளை ஒரு இடத்தில் தொகுக்கக்கூடிய பெரிய அமைப்புகள் அன்று உருவாக்கப்படவில்லை. இன்று சுதந்திரத்திற்கு பிறகு தான் பல்கலைக் கழகங்கள் உருவாக்கப்பட்டன. தரவுகளும் உள்ளே வருகின்றன. தரவுகளை கொள்கைகளாக மாற்றக் கூடிய அறிஞர்கள் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். இது ஒரு தறி போலவே. முன்னும் பின்னுமாக இயங்கி கொண்டிருக்கிறது. இந்த இயக்கம் சில ஆண்டுகள் நீடித்த பிறகு தான் வரலாற்றை பற்றிய ஒரு தெளிவு ஏற்படும். இந்திய வரலாற்றை பற்றிய ஒரு தெளிவான சித்திரம் என்பது 60-களுக்கு பிறகு தான் ஓரளவுக்கு தெளிந்து வருகிறது.

அம்பேத்கர் எழுதியதெல்லாம் 30-40 களில். ஆகவே வரலாற்று ஆசிரியராக அரிதி முடிவுகளை உருவாக்கும் இடத்தில் அவரில்லை ஊகங்கள், சாத்தியங்களை வாய்ப்புகளை மட்டுமே அவர் சொல்ல முடியும். அதை தான் அவர் சொல்லியிருக்கிறார். வரலாற்றை ஆய்வதற்கான ஒரு பார்வையை மற்றும் வழிகாட்டிகளை சுட்டிக் காட்டியவர் என்று

அவரை குறிப்பிட முடியும். வரலாற்று ஆய்விற்கான ஒரு தத்துவக் கொள்கைகளை உருவாக்கியவர் என்று அவரை நாம் பார்க்க முடியும். வரலாற்று ஆய்வின் முடிவுகளுக்காக அம்பேத்கரை அணுக கூடாது முடியாது. அது வரலாற்று ஆய்வின் குழந்தை பருவத்தில் எழுதப்பட்டது. இந்த உரையின் தொடக்கத்திலே விவாதம் என்ற வார்த்தையைப் பயன் படுத்தினேன். அம்பேத்கருடைய ஒவ்வொரு வார்த்தையையுமே மத நூல்களின் மேற்கோள்களாக எடுத்து கொள்பவர்களுக்கு வரலாற்று ஆய்வுகள் உகந்தது அல்ல. அவருடன் தொடர்ந்து விவாதித்து ஏற்று மறுத்தும் பேசுபவர்களுக்குத்தான் வரலாற்று ஆய்வுகளில் இடமிருக்கிறது. அவர் ஒரு வழி காட்டுகிறார். அந்த வழியை மறுபதற்க்கான முழு சுதந்திரத்துடன் அவரை அணுக வேண்டும். அவரை வாதிக்க வேண்டும். எப்படி நீங்கள் பிளாட்டோ வுடன் வாதிப்பீர்களோ அரிஸ்டாட்டில் உடன் வாதிப்பீர்களோ காரல் மார்க்ஸ் உடன் வாதிப்பீர்களோ அவ்வாறே அம்பேத்காருடன் வாதிக்க வேண்டும் என்று சொல்லலாம். நான்கு வகையான வரலாற்று எழுத்துக்குள்ளும் அவருடைய பார்வை அடங்காது என்பதனால் தான் இந்த தலைப்பு இங்கு பேசப்படுகிறது. அதாவது அம்பேத்கார் காலனி ஆதிக்க வரலாற்றை எழுத்து முறையை ஏற்றுக் கொண்டவர் அல்ல. அவருடைய இயல்புபடி எந்த வகையான ஆதிக்க பாதையையும் ஏற்றுக் கொள்ள முடியாது.

அவரும் மிகப்பெரிய அளவிலே ஐரோப்பிய கல்வி பெற்றவர் ஐரோப்பிய பார்வையுடையவர். ஆனாலும் ஐரோப்பாவுடைய ஆதிக்க பார்வையை ஏற்றுக்கொண்டவர் அல்ல. ஐரோப்பியர்கள் எழுதிய வரலாற்றில் அவர்க்கு கடுமையான விமர்சனங்களும் மாற்றுக்கருத்துகளும் அவருக்கு நிறைய இருக்கின்றன. ஐரோப்பியர்கள் இங்கிருக்கக்கூடிய ஆதிக்கத்தைச் சார்ந்துதான் அந்த வரலாறுகளை எழுதினார்களேயொழிய அடித்தளம் சார்ந்து எழுதவில்லை என்று அம்பேத்கர் எண்ணுகிறார். இங்கிருந்து ஆதிக்கம் இவ்வாறு உருவாகியது, அது எவ்வாறு மாறிக்கொண்டுவந்தது. இந்தியாவுடைய தேசிய பெருமித வரலாற்றை அம்பேத்கர் முழுமையாகவேய நிராகரிக்கிறார்.அது இயல்பானது. அதை நிராகரிப்பதற்கான முதல் காரணம் தலித்துகளைப் பற்றிய அவருடைய பார்வை. இந்த தேசிய பெருமித வரலாற்று ஆசிரியர்கள் ஒடுக்கப்பட்ட மக்களைப்பற்றி , தலித்துகளைப் பற்றி அல்லது இந்தியாவுடைய பொதுவான பொருளியல் , சமூகவியல் , மதம்சார்ந்த ஒடுக்குமுறைகளை வரலாற்றில் சாதாரணமாக நிகழக்கூடியதுதானே என்று எடுத்துக்கொண்டார். அதை ஒரு moral பிரச்சனையாக மட்டும்தான் எடுத்துக்கொண்டார். மனம் திருந்தினால் நிறுத்திவிடலாம் , மாற்றிவிடலாம் என்று எடுத்துகொண்டாரே தவிர அது எவ்வாறு உருவாகி வந்தது , மூவாயிரம் ஆண்டுகளாக எவ்வாறு நிலைபெற்றது , அதனுடைய அடிப்படையான படிமங்கள் என்ன , தொன்மங்கள் என்ன , நம்பிக்கைககள் என்ன என்பதைப்பற்றிய கேள்விகளுக்கு அவர் செல்ல விரும்பவில்லை. சிறந்த உதாரணம் நீலகண்டசாஸ்திரி சோழர்களைப்பற்றி எழுதினார். சோழகாலம் பொற்காலமென்றால் அது மிகையாகாது. சோழக்காலத்தில்தான் தமிழகம் மிக செழிப்பாக இருந்தது கலைகள் வளர்ந்தன இலக்கியங்கள் பெருகின. இன்றைக்கும் நாம் சாப்பிடும் சோற்றின் பெரும்பகுதி சோழகால ஏரிகளால் உருவாக்கப்பட்ட விளைநிலங்களிலிருந்து வருபவை. சோழ காலத்தில் தான் நில அடிமை முறை உருவாக்கப்பட்டன. சோழ காலத்தில் தான் தமிழகத்தின் பல தலித்துகள் அடிமையாக்கப்பட்ட்டனர். மாற முடியாத ஒன்றாக சாதி முறைகள் நிலை நிறுத்தப்பட்டது சோழ காலத்தில். இதைத் தான் நீல கண்ட சாஸ்திரி கூறுகிறார். நீண்ட காலம் கழித்து கே. கே. பிள்ளை தான் அதை எழுதுகிறார். தேசிய வரலாறு இயல்பாக விடக் கூடிய ஒரு பகுதியாக இருக்கிறது. அதை அம்பேத்கர் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியாவில் தேசியப் பெருமித வரலாறுகள் அம்பேத்கருடைய பார்வைக்கு ஏற்றுக் கொள்ளப் படக்கூடியவை அல்ல. மூன்றாவதாக மார்க்சியப் பார்வைக்கு இது மிகவும் சிக்கலான விஷயம். ஏனென்றால் உண்மையிலேயே இந்தியாவில் தலித் இயக்கங்களும் மார்க்ஸ் இயக்கங்களும் சேர்ந்து தான் இயங்கிக் கொண்டிருக்கின்றன இனைந்து செயல்படக் கூடிய கட்டாயத்தில் இருக்கின்றன. ஆதலால் மிகவும் கடுமையான விவாதம் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் குறைவு. எனினும் அம்பேத்கர் மார்க்ஸ் மீது வைக்கும் குற்றச்ச்சாட்டுகள் அல்லது விமர்சனங்கள் முக்கியமானவை. ஒரு உரையில் உள்ள சில வரிகளை படிக்கிறேன். ஆர்வமுள்ளவர்கள் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் பல உள்ளன. மார்க்ஸிய பார்வை என்பது என்ன? உற்பத்தி உறவுகள் உற்பத்தி மூலங்கள் ஆகியவைதான் அடித்தளம். அரசு பண்பாடு முதலியவை மேல் கட்டுமானம். உண்மையான மாற்றங்கள் அடித்தளத்தில் நிகழமுடியும். மேல் தளத்திலுள்ள எல்லாமே அடித்தளத்தினுடைய இயல்பினால் உருவாக்கப்பட்டவை. கலாசாரமும் சரி, அரசும் சரி, மதமும் சரி, நம்பிக்கைகளும் சரி பொருளியல் உறவுகளால், பொருளியல் சக்திகளின் முரண்பாடுகளால் உருவாகக்கூடியவை. இதுதான், சுருக்கமாகச் சொன்னால், மார்க்ஸியப் பார்வை. இந்த *reductionism,* இந்த குறுக்கல்வாதத்தை அம்பேத்கர் ஏற்றுக்கொள்ளவில்லை. அம்பேத்கருடைய விமர்சனங்கள் மிக விரிவாக முன்வைக்கப்பட்டிருக்கின்றன. ஆரம்பகாலத்தில் மார்க்ஸியர்களும் அம்பேத்கருக்கு விரிவான பதிலை அளித்திருக்கிறார்கள். அந்த விவாதங்களை இன்றைய மாணவர்கள் தொடர்ந்து படிக்கலாம். அவற்றை இன்றைய முகநூல் விவாதத்தின்

தரத்திற்குக் கொண்டுவந்து பேசக்கூடாது. இந்த மாதிரி விசயங்களை எழுதும்போது எனக்கு நானே போட்டுக்கொள்ளக் கூடிய கட்டுப்பாடு இது. எல்லாவற்றையுமே வெறும் வம்பாக மாற்றக்கூடிய ஒரு தளத்திற்கு இதைக் கொண்டுவந்தோமென்றால் அந்த விவாதமென்பது வெறும் பூசலாக மாறிவிடும். இது பூசலுக்கான இடம் அல்ல. இரண்டு பேரறிஞர்களுடைய பார்வை ஒன்றுகொன்று முரண்படும்போது உண்மையில் ஒரு புத்தம்புதிய வாய்ப்புதான் திறக்கிறதே ஒழிய அவர்கள் ஒருவரை ஒருவர் மறுப்பதில்லை. அம்பேத்கர் மார்க்ஸியத்தை மறுக்கக்கூடிய இரண்டாவது இடம் – மார்க்ஸியம் கலாச்சார உருவாக்கத்தை கருத்தில்கொள்ளவில்லை என்பதுதான். கலாச்சாரத்தைப்பற்றி மார்க்ஸியப் புரிதலென்பது பலவீனமானது. ஒடுக்குமுறையில் சுரண்டலில் கலாச்சாரம் வகிக்ககூடிய பங்கு என்பது மிக நுட்பமானது. பிச்சை எடுக்கும் பிராமணனை விட உழைப்பாளனான தலித் ஒருபடி தாழ்ந்தவனாக இருக்கக்கூடிய சமூகநிலை மார்க்ஸியத்தால் புரிந்துகொள்ளக்கூடியதல்ல என்பது அம்பேத்கருடைய கருத்து. அது மார்க்ஸியத்துக்குள் வராது. உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்று சொல்லும்போது உயர்சாதி தொழிலாளர்களும் தலித் தொழிலாலர்களும் ஒரே அணியில் ஒன்றுதிரள முடியாத நிலை ஒன்று இருக்கிறது அல்லவா. அது ஒரு கலாச்சாரக் கூறு. அதைக் கருத்தில் கொள்ளவேண்டும். இது அம்பேத்கர் சொன்னது. மூன்றாவதாக அம்பேத்கர் மார்க்ஸியத்தின் மேல் வைக்கக்கூடிய குற்றச்சாட்டு – மறுப்பு. மார்க்ஸியத்தினுடைய *Ethics* மீது அவருக்கு நம்பிக்கையில்லை. அல்லது மார்க்ஸியத்திற்கு சரியான *ethics* இல்லை, அறவியல் இல்லை என்று அவர் நினைக்கிறார். அவர் வண்முறையை ஏற்றுக்கொள்ளக்கூடியவரல்ல. மார்க்ஸியப் புரட்சி ரஷ்யாவில் நிகழ்த்திய வன்முறைகளை, அடிப்படையில் சித்தாந்தியும் மனிதாபிமானியுமான அம்பேத்கரால் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு புரட்சியின்பொருட்டு மாற்றத்தின்பொருட்டு இவ்வவு பெரிய அழிவை நிகழ்த்தலாம் எத்தனைபேரை வேண்டுமானாலும் கொல்லலாம் என்பதை அம்பேத்கரால் ஏற்றுக்கொள்ள முடியாது. அம்பேத்கர் மார்க்ஸிய அறவியல் பற்றி எழுப்பிய அடித்தளமான கேள்விகளை அன்றைக்குப் பேசும்போது அவரொரு பழமையான இடத்திலிருந்து பேசுகிறார் என்று தோன்றியது. ஆனால் தொண்ணூற்றிரண்டில் சோவியத் ரஷ்யா உடைந்த பிறகு அதைப் படிக்கும்போது ஒவ்வொரு வரியும் அத்தனை அர்த்தத்துடன் கிளம்பிவந்தன. நானே இரண்டு காலகட்டங்களில் படித்திருக்கிறேன். எண்பத்தைந்து எண்பத்தாறுகளில் கேரளத்திலே மார்க்ஸிய அரங்குகள் வழியாக அம்பேத்கரைப் படிக்கும்போது பழமையான அளவியலைக் கொண்டுவந்து ஒரு புத்தம்புதிய சிந்தனைமேல் போடக்கூடியவராகத் தோன்றினார். அம்பேத்கர் மேல் கடுமையாக முரண்பட்டேன்.
தொண்ணூற்றிரண்டுகளுக்குப் பிறகு அறம் என்பது *ethics* என்பது ஒரு முக்கியமான விஷயம். சமூக மாற்றத்திற்காக *ethics* ஐ மாற்றிக்கொள்ளலாமென்றால், சமூகம் மாறிக்கொண்டேதான் இருக்கும். ஒரு புதிய சமூதாய அமைப்புக்காக ஒருகோடிபேரைக் கொல்லலாமென்றால், அந்த புதிய சமூதாய அமைப்பு தோற்றுவிட்டதென்றால் அந்த ஒருகோடிபேர் செத்தவர்களுக்கு யார் பதில்சொல்வது. ஒரு புரட்சியின் பொருட்டு பத்துலட்சம்பேர் சாகிறார்கள். புரட்சியும் தோற்றுவிட்டது. பத்துலட்சம் பெருக்கு என்ன பதில். ஆகவே ஒரு நவீன அறவியல் என்பது தேவையாகிறது. இந்த மூன்று அடிப்படையில் மார்க்ஸிய கொள்கைகளை அம்பேத்கர் மறுக்கிறார். ஆகவே மூன்றாவது வரலாற்றுப் பார்வை என்பது அம்பேத்கர் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்காது. அல்லது, அந்த வரலாற்றுப் பார்வை அம்பேத்கரியப் பார்வையாக இருக்காது. நாங்காவதாக, தொண்ணூறுகளில் உருவாகிவந்த *marginalist history*. அது சமுதாயத்திலிருந்து வெளியே தள்ளப்பட்டவர்களைப் பற்றியது. சமுதாயத்தினுடைய விளிம்புக்கு வெளியே இருப்பவர்களைப் பற்றியது. அம்பேத்கர் பேசுவது வெளியே இருப்பவர்களைப் பற்றியல்ல. தலித்துகள் *marginalized people* அல்ல. அவர்கள்தான் சமுதாயத்தினுடைய அஸ்திவாரம். மொத்த சமுதாயமும் அவர்களை அழுத்துகிறது. எப்படி ஒரு கட்டிடம் அஸ்திவாரத்தை அழுத்துகிறதோ அதைப்போல. ஆகவே அவர்கள் இல்லையென்றால் இந்த சமுதாயம் இல்லை. அவர்கள் சமுதாயத்திற்கு வெளியே இல்லை. அடியில் இருக்கிறார்கள். *Marginalized studies* உடன் தலித் *studies* ஐ இணைப்பதென்பது அடிப்படையான மிகப்பெரிய பிழையை உருவாக்கும். ஒரு நகர்ப்புற சேரியில் வசிப்பவரல்ல ஒரு தலித். நகர்புறத்தில் தன்னிச்சியாக சேரிகள் உருவாகிவருகின்றன. அங்கு குற்றம் சார்ந்து ஒரு வாழ்க்கை இருக்கிறது. ஒரு நடுத்தரப்புத்தி இயல்பாக அவர்களையும் தலித் என்று பார்க்கும். ஆனால் அவர்கள் தலித் அல்ல. பலவகையான குற்றச்செயல்பாடுகள் வழியாக சேர்ந்து வரக்கூடிய ஒரு *slum* அது. தலித் வாழ்க்கை என்பது முற்றிலும் வேறானது. இந்த ஒட்டுமொத்த சமூகக் கட்டுமானத்தின் அடித்தளத்தில் இருக்கக்கூடியது. ஆகவே தலித் *studies* என்பது *marginalized studies* அல்ல. ஆகவே இந்த நான்கு வரலாற்று எழுத்து முறைகளிலும் அம்பேத்கருடைய பார்வை வர முடியாது. அது ஐந்தாவது பார்வையாகத்தான் இருக்க முடியும். அப்படி இருக்கிறதா என்று பார்த்தால். கடந்து பத்து பதினைந்து ஆண்டுகளாக வரலாற்று ஆய்வுநூல்களில் அம்பேத்கர் மேற்கோள்காட்டப்படுவது கூடிவருகிறது.

அம்பேத்கர் உடைய பார்வையில் வரலாற்று ஏடுகளை எழுதுபவர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள் என்று என்னுடைய மதிப்பிற்குரிய வரலாற்று ஆசிரியர்கள் சொல்கிறார்கள். ஆனாலும் அம்பேத்கர் உடைய பார்வை ஒரு 5ஆவது கோணமாக வலு பெற்றுஉள்ளதா? சொல்லும் அளவிற்கு திரண்டு இருக்கிறதா? என்று கேட்டால் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். எதிர்காலத்தில் அப்படி ஒரு 5ஆவது பார்வை உருவாகி வரலாம். அந்த பார்வை என்ன? மற்றும் அதன் விதிகள் என்ன? என்பதை அம்பேத்கர் உடைய எழுத்துகளில் இருந்து பார்க்கலாம். அப்படி அவருடைய வரலாற்று பார்வையின் அடிப்படை என்ன? சிலவற்றை வகுத்து சொல்லலாம்.

ஒன்றாவதாக, அவரை historical positivism என்று சொல்லுவார்கள். postivism என்றால் புறவயவாதம் என்று தமிழிலில் சொல்லலாம். தெளிவான துல்லியமான தகவல் அடிப்படையில் objective ஆக, புரவயமாக எழுத்தப்படக்கூடிய வரலாற்றை ஏற்கும் தன்மை அம்பேத்கர் உடைய வரலாற்று ஆய்வுக்கு உண்டு. அவரவர் சொந்த விருப்பு வெறுப்புக்கு அங்கு இடம் இல்லை. Positivism என்கிற தத்துவ நிலைப்பாட்டின் அடிப்படையில் வரலாற்றை பார்ப்பது. இந்த positive approach எல்லா விதமான மிதமிஞ்சிய தாவல்கைளை எதிர்க்கும். ஏனென்றால் இன்று தமிழ்நாட்டில் வரலாற்று ஆய்வு என்பது கற்பனைக் குதிரையைத் தட்டி விடுவது. கொரியா இளவரசி தமிழச்சி, கம்போடியா கோவிலை கட்டியது தமிழன், எகிப்து பிரமிட்இல் தமிழ் எழுத்தப்பட்டுஉள்ளது. இப்படி வரலாறு எழுதப்படுகிறது.

நண்பர்களே,

சென்ற 20 ஆண்டுகளில் தமிழில் எழுதப்பட்ட உச்ச கட்ட காமெடி வடிவேலு காமெடி அல்ல.வரலாறு என்னும் பெயரில் youtube இல் எழுதப்பட்ட பதிவுகள் தான். நமது சந்ததி நினைத்து நினைத்து சிரிக்க கூடிய விஷயங்கள் அதில் உள்ளது. இந்த வகையான கற்பனைத் தாவல்கள் இல்லாத ஒரு வரலாற்று ஆய்வை தான் அம்பேத்கர் உடைய வரலாறாக எடுக்க முடியும். அது புரவயமான தகவல் அடிப்படையில் சொல்லப்பட்டது. கற்பனை வரலாற்றில் இருக்கும் விறுவிறுப்பு இதில் இருக்காது. ஆனால் இதுதான் அம்பேத்கர் உடைய அணுகுமுறை. அவரிடம் இருந்த இரக்கம் இல்லாத புறவயத்தன்மை இளம் வாசகன் ஆகிய எனக்கு சிறிது எரிச்சல் ஊட்டி உள்ளது.ஆனால் அதுதான் சரியான வரலாறு. இன்று ஒட்டுமொத்த தமிழில் வரலாற்றின் பெயரில் நடந்து கொண்டு இருக்க கூடிய உச்சகட்டக் காமெடிக்குப் பதிலாக அம்பேத்கர் உடைய வரலாற்று ஆய்வுமுறை positivism approach ஆக இருக்க முடியும்.

இரண்டாவதாக, அம்பேத்கர் உடைய தனித்தன்மை என்பது சென்டிமென்ட் இல்லாத தன்மையுடைய வரலாறு. அதாவது மெல்லுணர்ச்சிகள் இல்லாத வரலாறு. அவருடைய வரலாற்று அணுகுமுறை முற்றிலும் sentiments க்கு புறம்பானது. தேசியவாதிகளால் எழுதப்பட்ட வரலாறு உச்சகட்ட sentiments களால் எழுதப்பட்டது. தலித்களுக்கு இறந்த காலம் எந்த வகையிலும் அவர்களிடம் கருணையுடன் இருந்ததேயில்லை என்றே தோன்றுகிறது .நினைத்து நினைத்து பெருமிதம் கொள்வதற்கு அவர்களிடம் எதுவுமே இல்லை.,அவர்கள் வாழும் நிலத்தில் கூட அவர்களுக்கு பற்றில்லை,வாய்ப்பு கிடைக்கும் போதுலாம் அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து தப்பி ஓடிக் கொண்டிருக்கிறார்கள். பிற நகரங்களுக்கு நாடுகளுக்கு. இப்படி sentiment(உணர்மங்கள்) இல்லாதிருக்கும் போது எந்த வகையில் வரலாற்றை எழுத முடியும்?sentiment இல்லாத வரலாறு அம்பேத்கர் பார்வையில் முக்கியமானது.

தேசிய பெருமிதமும் துணை தேசிய பெருமிதமும் ஒத்ததன்மை உடையது.ஆகவே அம்பேத்கர் பார்வையானது எந்தவித sentiment க்கும் எதிரானதே,அவர் இதை திரும்ப திரும்ப பல இடத்தில் சொல்லியிருக்கிறார்.

மூன்றாவதாக, மக்கள் வரலாறு (people's history).மக்கள் வரலாற்றை எழுதப்பட வேண்டும் என்று அம்பேத்கர் சொல்லும் அன்றைய காலகட்டத்தில் அசோகர்,சோழர்களின் பொற்கால கனவுகளை தேடி தேடி கண்டெடுத்து கொண்டிருந்தார்கள்.மக்கள் வரலாறு என்பது மக்கள் சமூகங்களாக வாழ்ந்து வந்த பரிணாம வழித்தடத்தை எழுதுவது, அரசருடைய வரலாறு அல்ல. ஆலயங்களின் வரலாறு அல்ல. ஆதிக்கத்தின் வரலாறு அல்ல. நம் நாட்டில் people's history-ஐ உயிராக கொண்டு ஒரு புத்தகம் கூட எழுதப்படவில்லை என்பது வருத்தமே.

எடுத்துக்காட்டாக சங்க காலத்தில் "உமணர்" என்கிற சாதி ஒன்று இருந்துள்ளது ஆனால் தற்பொழுது அந்த சாதி என்னவாக, எந்த

*சாதியாக மாறி இருக்கிறது என்பதுபோன்ற கேள்வியை மையமாக கொண்டு ஏதேனும்  தமிழில் ஆய்வுகள் உண்டா?*

*புறநானூற்றில் பூஜைக்குரிய பொருட்களை பட்டியலிட கூடிய பாடல் ஒன்றில் துடியன், பாணன், பறையன், கடம்பன் போன்ற சாதிகளின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. இன்றைக்கு இருக்கக்கூடியது, பறையன் சாதி மட்டும்தான். மற்ற சாதிகள் என்ன ஆயின. உருமாறியனவா. இதை எழுதாமல் என்ன வரலாறு எழுத முடியும். இவை அனைத்தும் வழிபாட்டு சார்ந்த சாதியாக இருக்க வாய்ப்புள்ளது.*

*இங்கு துடி- ஒரு வகையான வாத்தியம் அதை வாசிக்கும் சாதியினர் துடியனாக இருக்கலாம், பாணன் என்பவன் பாட கூடியவனாக இருக்கலாம். பறையன் என்பவன் பறை அடித்தல் மட்டுமல்ல. குறிச்சொல்லுதல் சார்ந்த சாதியையும் பறையன் என்று மலையாளத்தில் உள்ளது, கடம்பன் என்பது கடம்ப மர வேலைப்பாடை செய்யும் சாதியினராக இருக்கலாம் இவை அனைத்தும் ஊகங்களாயினும் நமக்கு ஆய்வின் வழியாக சமூக கட்டமைப்பை புரிந்து கொள்ள உதவும். அதில் பறையன் தவிர மற்றைய மூன்று சாதிகள் என்னவாயின ? இது போன்ற  ஆய்வுகள் நிகழ்ந்ததா நம் சமூக- கலாச்சார அறிவு தளத்தில் என்றால் இல்லை என்றே பதில் மிஞ்சும். எனவே அம்பேத்கரின் மக்கள் வரலாறானது வெறும் ஆதிக்கத்தின் வரலாறல்ல, மக்கள் வரலாற்றின்  ஒரு பகுதியே ஆதிக்க வரலாறு.*

*அடுத்தபடியாக அம்பேத்கரின் வரலாற்று ஆய்வில் தற்பொழுதுள்ள நடைமுறை,அரசியல் சிக்கலுக்கு விடைகளாக அந்த சிக்கலுக்கு காரணமான வரலாற்றை தேடி செல்வது முக்கியமானதாகும்*

*எடுத்துக்காட்டாக மல்லர் என்கிற சாதி பல்லர்களாக மாறின அவர்கள் ஒரு காலத்தில் நிலயுடைமை உள்ளவரகளாக இருத்தனர் ஆனால் இன்று நிலம் அற்றவர்களாக இருக்கிறார்கள். எந்த காரணத்தால் இந்த சமூக உறவில் மாற்றம் ஏற்பட்டது போன்ற கேள்விகளுக்கு வரலாற்றில் செல்வது அம்பேத்கரின் அணுகுமுறை. அம்பேத்கரின் பார்வை பெரும்பாலும் வரலாற்றை எழுதுவதென்பது வரலாற்று நிகழ்வுகளை ஆண்டுகளின் வரிசை அடிப்படையில்  பட்டியலிடுவது அல்ல ,நம் தற்போதைய கேள்விகளுக்கு வரலாற்றில் செல்வதே அவரின் வரலாற்று நோக்கு.*

*அடுத்த எடுத்துக்காட்டாக உத்திர பிரதேச வரலாற்றை எடுத்தால் அதில் முன்று தரப்பு உள்ளது.*

*1). க்ஷதிரியர் பிராமணர்*
*2). யாதவர்கள்*
*3). தலித்கள்*

*ஆகிய மூன்று தரப்பும் மகாபாரத காலத்திலிருந்து இன்று வரை  உள்ளது. இங்கு உள்ள அரசியல் கேள்விக்கு இந்த மூன்று தரப்பின் படிநிலை,உறவு ஆகியவற்றை ஆராய்வது அம்பேத்கரின் வாலாற்று நோக்கு. இன்றைக்குள்ள உத்தரபிரதேச அரசியலை நீங்கள் மூவாயிரம் வருட அரசியலின் வரிசையாகப் போட்டுவிட முடியும். இவ்வாறு இந்திய வரலாற்றிலிருந்து இன்றைய தேவைகளிலிருந்து நேற்றைக்கு செல்வதற்கு அம்பெத்கரின் பார்வை மிக முக்கியமானது. அடுத்தபடியாக, தொன்மங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பார்க்கக்கூடிய பார்வையாக அம்பேத்கருடைய பார்வை இருக்கிறது. இது தொன்மங்களை தன்னிச்சியாக விளக்குவதல்ல. தமிழகத்தில் இது ரொம்ப அதிகம். ஏதாவதொரு கதையை எடுத்து அதுதான் வரலாற்றின் விடை என்று சொல்வதல்ல. நான் ஏற்கனவே சொன்னதுபோல, positivism சார்ந்த ஒரு வரலாற்றுப்பார்வையில் நின்றுகொண்டு தொன்மங்களை அணுகுவது. தொன்மங்களுக்கு எனக்கு இப்படி தோன்றுகிறது என்பதல்ல. இன்னின்ன வரலாற்றுச் சூழலில் இந்திந்த பண்பாட்டுப் பின்னணியில் இந்த தொன்மத்தை இப்படி எடுத்துக்கொள்லலாம் என்று ஆராய்வது. அந்த வகையில் பார்த்தால் மகாபாரதத்தை ஒரு பெரிய தொன்மக்களஞ்சியமாக ஒரு வரலாற்றுத் தொகுப்பாகப் பார்த்த முக்கியமான ஆய்வாளர் அம்பேத்கர். மகாபாரதத்தைப் பற்றிய என்னுடைய பார்வைகளை உருவாக்குவதில் அவருடைய முக்கிய பங்கிருக்கிறது. பல உதாரணங்களைச் சொல்லலாம். உதாரணமாக அசுரர் எங்கிற வார்த்தை. ஆரம்பகால வேதகாலத்தில் அசுரர் என்ற வார்த்தை அத்தனை எதிர்மறையானதாக இருக்கவில்லை. குபேரன், யமன், ஏன் இந்திரன் கூட அசுரனாக இருந்து வேள்வியின் வழியாகத்தான் தேவர்களாகியிருக்கிறார்கள். மகாபாரதத்தின் கடைசி காலகட்டத்திலும் அசுரன் எங்கிற வார்த்தை அவ்வளவு எதிர்ம்றையானதாக இல்லை. கிருஷ்ணனுடைய மகனும் பேரனும் அசுர குலத்தில்தான்*

ஈராயிரம் ஆண்டுகளில் அசுரர் என்பது தீமையின் உருவமாக மாற்றப்படுகிறது. *Evil* ஆக ,மாற்றப்படுகிறது. இந்த மாற்றம் எப்படி நடந்தது. இந்த மாற்றத்தின் வழியாக வந்த அடக்குமுறை என்ன சுரண்டல் என்ன. இதைப்பார்க்கக் கூடிய ஒரு அறிவுக்கருவி வரலாற்றிற்கு வேண்டும். அது அம்பேத்கருடைய பார்வை. அம்பேத்கர் மகாபாரதத்தை இந்திய தொன்மங்களை ஆராய்ந்த முறை அதற்கு முன்னுதாரணமாக அமையும். கடைசியாக ஒன்று – அது இன்றைய அம்பேத்கரியர்களுக்கு சற்று சங்கடம் கொடுக்கக்கூடிய ஒன்றாக இருக்கும். ஏனென்றால் திருப்பத்திரும்ப அம்பேத்கரை ஒரு அரசியலுக்குள் நின்றுதான் அவர்கள் பார்க்கிறார்கள். அம்பேத்கர் கடைசி காலத்தில் பௌத்த மதத்திற்கு மாறினார் என்பது முக்கியமானது. அதற்கு மனிதனுக்கு ஆன்மீகம் முக்கியமானது என்று அவர் நினைத்தார். அந்த அம்சம் அம்பேத்கருடைய வரலாற்றாய்வில் முக்கியமானது. வரலாறு என்பது மனிதன் என்கிற உற்பத்தி அலகு எப்படி பரிணாமம் அடைந்து வந்தது அல்ல.மனிதன் என்கிற ஒரு சமூக அடையாளம் எப்படி பரிணாமம் அடைந்து வந்ததல்ல வரலாறு. மனிதன் என்ற அகம் அவனுடைய ஆன்மீகம் எப்படி பரிணாமம் அடைந்து வந்தது என்பது வரலாறு. அந்த வரலாற்றையும் இணைத்துக்கொண்டு எழுதுவது ஒரு வரலாறு. அப்படி வரலாறு என்று ஏற்கனவே சொன்ன நான்கு வரலாறுகளில் கிடையாது. அந்த நான்கு பேருக்குமே மதம் என்பது ஒரு சமூக அமைப்பு தான்.பவுத்தத்தை அவர்கள் ஒரு வகை அரசியல் எழுச்சியாகத்தான் பார்ப்பார்கள்.வைதீகத்திற்கெதிரான எழுச்சி மட்டும் தான் அவர்கள். ஆனால் அம்பேத்காருக்கு அப்படி அல்ல.இந்தியாவினுடைய அகத்தை(செல்ப்) வடிவமைக்க பௌத்தம் மிகப்பெரிய பங்காற்றியுள்ளது.அந்த பங்களிப்பு எப்படி ஆற்றியுள்ளது என்பதை அவர் எழுதியிருக்கிறார்.அந்த வகையில் அவருடைய புத்த மதத்தின் தம்மம் என்பது வரலாற்று ஆய்வகத்திற்கான ஒரு வழிகாட்டு நூலாக எடுத்துக்கொள்ளப்படுகிறது.இதெல்லாம் தான் அம்பேத்காருடைய வரலாற்றுப் பார்வை. இந்த அடிப்படையில் ஒரு வரலாற்று ஆய்வுமுறை இந்தியாவில் உருவாகும் என்றால் , எதிர்காலத்தில் வளரும் என்றால் இதுவரைக்கும் அந்த நான்கு வரலாற்று ஆய்வுக்கு மேலாக ஐந்தாவது வரலாற்று ஆய்வு முறையாக அது நிலைகொள்ளும் என நம்புகிறேன். அதில் அடிப்படை விதிகளென நான் சொல்வது ஒன்று, *Historical pastism, sentimental* இல்லாத அணுகுமுறை, மக்கள் வரலாறு, நடைமுறை அரசியலுக்கு வரலாற்றுக்கு செல்லும் பார்வை,தொன்மங்களை புறவயமான நோக்கங்களில் அணுகக்கூடிய வரலாற்று பார்வை. மனிதருடைய ஆன்மீக பரிணாமத்தையும்வரலாற்றயும் இணைத்துக் கொள்ளக்கூடிய பார்வை ஆகியன. இதற்கு அப்பால் இந்திய வரலாற்றில் அம்பேத்கர் மேல் விமர்சனமாக என்ன சொல்லலாம்?. என்னுடைய பார்வையில் மூன்று விமர்சனங்களை சொல்கிறேன். ஒன்று - அவருடைய அந்த காலத்து வரலாறு யாவையுமே பிரிட்டிஷ் ஆய்வாளர்கள் உருவாக்கிய தரவுகளின் அடிப்படையில் மட்டும் தான் நடந்தது, அதுதான் கிடைத்தன. இரண்டாவதாக ஐரோப்பிய வரலாற்று ஆய்வினுடைய நெறிகளை பெரும்பாலும் அப்படியே ஏற்றுக்கொண்டவர். அந்த ஆய்வையே முன்வைத்தார். அவருடைய குறைபாடுகளும் அவருடைய ஆய்வில் இல்லை. மூன்றாவதாக எந்த வகையிலுமே நாட்டுப்புற வரலாற்றை *(folk history)* கருத்தில் கொள்ளக் கூடியவராக இல்லை. அவருடைய இயல்பிலேயே அந்த அம்சம் உண்டு. அவர் ஒரு *sophisticated Western mind* உள்ளவர். அவருக்கு கிராமங்கள், நாடுப்புறத்தில் அவநம்பிக்கையே வலுவாக உள்ளன. பின்னாடி எழுபதுகளுக்கு பிறகு நாட்டுப்புறவியல் மேல் வந்த ஆய்வுகள் அவை அளிக்கக்கூடிய வெளிச்சங்களை பற்றிய புரிதல் இல்லாமல் இருந்தது இயல்பாக.. கடைசியாக ஒன்று உண்டு . அதை சொல்லி முடிப்பார். அதை அயோத்திதாசர் வழியாக சொல்லப்பட வேண்டும்.அம்பேத்கருடைய வரலாற்றுப் பார்வை என்பது அடித்தள மக்களின் வழியாக வரலாற்றை எழுதுவது. காலங்காலமாக அவர்கள் ஒடுக்கப்பட்டதையும், சுரண்டப்பட்டதையும் எழுதுவது, பெருமிதங்களுக்கு எதிரானது.

ஆனால் அயோத்திதாசர் பெருமிதங்களை முன்வைக்கிறார். காலங்காலமாக ஒடுக்கப்படவில்லை, ஒரு குறிப்பிட்ட காலத்தில் தோல்வியடைந்து, வீழ்ச்சியடைந்த வரலாறு இருக்கிறது என சொல்லவருகின்றன. அதற்கு வரலாற்று சான்று இருக்கிறது. சோழர்காலத்தின் முன்புவரை இருந்த பறையருடைய சமூக நிலை சோழர் காலத்தில் இல்லை என்பது ஆய்வாளர்களால் கல்வெட்டு சான்றுகொண்டு நிரூபிக்கப்பட்ட விஷயம். அந்த வீழ்ச்சியின் சித்திரம் எழுச்சியின் சித்திரமாக மாறலாமே. வரலாறு அற்ற நிலை அல்லது எப்போதுமே ஒடுக்கப்பட்டோம் என்ற தன்னுணர்வு நிலையைவிட இந்த பெருமிதம் மிகப்பெரிய அரசியல் ஆயுதமாக மாறும்- இது ஒரு முக்கியமான கேள்வி. அம்பேத்கருடைய வரலாறு உருவாகும் என்றால் எழுதப்பட்ட வரலாறுகளுக்கு எதிர்வினையாக,எதிர்மறை தன்மை கொண்ட, பதிலாக அமையக்கூடிய வரலாறாக இருக்கும். அதாவது இதுவரை எழுதப்படாத விஷயங்களுக்கு விளக்கமும், பதிலும் அளிக்கக்கூடியதாக இருக்கும். அல்லது அதை பொருட்படுத்தாமல் தன்னளவில் தானாக ஒரு வரலாற்றை உருவாக்கக் கூடிய ஒரு வரலாறாக அது இருக்கலாம்

இல்லையா? தலித்துகள் தங்கள் வரலாற்றை எழுதுவது பற்றி நான் சொல்ல வரவில்லை தலித்துகள் இந்திய வரலாறை எழுதுவது பற்றி நான் சொல்கிறேன். ஒட்டுமொத்த வரலாறை அவர் எழுதுகிறார். பாஸிடிவ் (positive) ஆன, நேர்மறையான பார்வையுடன் ஒட்டுமொத்த வரலாறை எழுதுவார்கள். அது வேறு ஒரு வழியாக இருக்கும். அயோத்திதாசருடைய வழியை எடுத்துக்கொண்டால் பெருமித வரலாறு என்பது ஒரு பெரிய அரசியல் ஆயுதம். வெற்றிக்கான வழி அது. அதாவது தலித்துகள் தங்களுக்கு சமவுரிமை வேண்டுமென்றல்ல, தாங்கள் ஒடுக்கப்படக்கூடாது என்றல்ல, தாங்கள் ஆள வேண்டும் என்று, ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்று யோசிக்கலாம் இல்லையா? அந்த பார்வை அம்பேத்கரின் பார்வையுடன் முரண்படக்கூடியதாக அமையும். அது ஒரு பாசிபிலிட்டி. யோசிக்க வேண்டிய ஒரு விஷயம். அம்பேத்காருடைய இந்த வரலாற்று பங்களிப்பு பற்றிய சித்திரத்தை ஒரு பொது வாசகனுக்கான ஒரு முன்வரைவாகத்தான் இருக்கிறது. இதை பற்றிய விவாதங்கள், அறிவுத்தள விவாதங்கள் நிகழலாம். அறிவுத்தள விவாதங்களுக்கு சில நெறிகள் இருக்கு. அரசியல் விவாதங்களுக்கு உரிய காழ்ப்புகளுக்கு இங்கு இடமில்லை. ஒரு துளி காழ்ப்பு இருந்தால் விவாதம் நடக்காது, காழ்ப்பு மட்டும் தான் இருக்கும். அரசியல்வாதிகள் அல்லாமல் நெடுங்காலம் பத்து அல்லது இருப்பது ஆண்டுகள் தன் வாழ்க்கையை வரலாற்று ஆய்வுக்கு செலவளிக்கக்கூடிய அடுத்த தலைமுறையினர் உருவாகிவந்து இந்த பார்வையை முன்னிறுத்தும் போது ஒரு ஐந்தாவது பார்வையாக அம்பேத்காருடைய வரலாற்றுக் கண்ணோட்டம் நிலை நிற்கும் என நான் நினைக்கிறன். அது ஒரு தரப்பாக அல்ல, ஒரு கருத்துநிலையாக ஒரு விவாத தரப்பாகத்தான் இருக்கும். பல கேள்விகளை முன்வைத்து, ஏற்று, மறுத்து விவாதிக்கக்கூடிய ஒரு தளமாக நிலை நிற்கும். அம்பேத்காருடைய மேற்கோள்கள் வழியாக அல்ல அவருடைய முடிவுகள் வழியாக அல்ல. அவருடைய கருத்துக்கள் வழியாக அல்ல அவர் முன்வைக்கக்கூடிய பார்வையின் வாய்ப்புகள் வழியாக புதிய சிந்தனை ஒன்று உருவாகி வரவேண்டும் என நினைக்கிறேன். நன்றி.

*To access the details of the information that Egalitarians sought under the RTI act, please click here.*

*Egalitarians maintains a repository of Caste atrocities reported in dailies. To access the repository, please click here.*

***We accept donations***

*To donate, please contact*

*EG Manoj*

*88515 83097*

***To join as a member***

*Please contact*

*EG Rajeswaran*

*8072633868*

*rajeswaranganes@gmail.com*

***We are on Facebook***

*To follow click here*

Click here to access previous issues of Egalitaria

*Egalitarians*

*United for Equality*